# கோழி இறைச்சி, மரக்கறிகளின் விலை அதிகரிப்பு



02 பக்கம்

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 60 சுபகிருது வருடம், ஆவணி மாதம் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(13.09.2022) ஹிஜ்ரி 1444, ஸஃபர் - 16 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

# 13ஐ அமுல்படுத்துங்கள்; ஐ.நாவில் வலியுறுத்திய இந்தியா!



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவும், மாகாண சபைகளுக்கு...

02 பக்கம்



# ஆறாவது தடவையாக ஆசியாவை வசப்படுத்திய இலங்கை அணி

ஏ.அகீல் சிஹாப்

பதினைந்தாவது ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் பாகிஸ்தானை இலகுவாக வீழ்த்தி இலங்கை அணி ஆறாவது தடவையாக சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

2022ஆம் ஆண்டிற்கான ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சம்பியனை தீர்மானிக்கின்ற இறுதிப்போட்டியில் இரு தடவைகள் சம்பியன் பட்டம் வென்ற பாகிஸ்தான் அணியும், ஐந்து தடவைகள் சம்பியன் பட்டம் வென்ற...

02 பக்கம்



# நாடாளுமன்றம் வந்தது தேசிய சபை பிரேரணை!

## 10 பேரைக் கொண்ட தெரிவுக்குழுவாக அடுத்தவாரம் சபையில் நிறைவேறும்

நமது அரசியல் செய்தியாளர்

நாட்டின் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் கொண்டுவரப்படவுள்ள தேசிய சபையை நிறுவுவதற்கான பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணை அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட உள்ளது.

02 பக்கம்

# உள்ளகப் பொறிமுறையே ஒரே தீர்வு!




## ஜெனீவாவில் அரசு அறிவிப்பு

## 'பொருளாதாரக் குற்றங்கள்' குறித்தும் கண்டனம்

நமது விசேட செய்தியாளர்

மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதில் சுயாதீனமான உள்நாட்டுப் பொறிமுறையின் ஊடாக முன்னேற்றத்தை அடையமுடியுமென நம்புவதாக, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் நேற்று அறிவித்த இலங்கை அரசாங்கம், ஐ.நா. ஆணையாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 'பொருளாதாரக் குற்றங்கள்' பற்றிய சொற்பிரயோகத்தை கடுமையாக சாடியுள்ளது.

02 பக்கம்

# கோணேஸ்வர ஆலயப்பகுதியை புனித பிரதேசமாக்க தீர்மானம்

## அமைச்சர் டக்ளஸின் கோரிக்கையை ஏற்று அமைச்சரவை நடவடிக்கை



திருகோணமலை, கோணேஸ்வரர் ஆலயத்தின் சுற்றாடலை புனித பிரதேசமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த கோரிக்கையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தி அந்தப் பகுதியை புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை நடந்த அமைச்சரவை கூட்டத்தின்போது கோணேஸ்வரர் ஆலய...

02 பக்கம்

# கோணேசர் ஆலய விவகாரம்; தமிழ்க் கட்சிகள் கூட்டாக ரணிலை சந்திக்க முடிவு

02 பக்கம்

# மட்டக்களப்பிலிருந்து 10 பேர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்கு

## விசாரணைக்கு அழைப்பு

02 பக்கம்

# தமிதாவுக்கு பிணை



குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நடிகை தமிதா அபேரத்னவிற்கு நீதிமன்றத்தினால் நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

# நெருக்கடியிலிருந்து மீள பல்வேறு உதவிகள்

## ஆசிய அபிவிருத்தி வங்கி ஜனாதிபதியிடம் உறுதி



இலங்கை எதிர்கொள்ளும் கடினமான சூழ்நிலையிலிருந்து மீள பல்வேறு துறைகளின் ஊடாக உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின்...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

இந்தியாவும் ஒரே அறிக்கையை வருஷா வருஷம் ஜெனீவாவில் வாசிச்சுக்கொண்டிருக்குது என்னங்கோ..



# பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்தோரை விடுதலை செய்க!

## யாழில் ஆளுநர் அலுவலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம்



02 பக்கம்



பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்துக்கு நேற்று வருகை தந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எலிசபெத் மகாராணியின் மறைவை யொட்டி அஞ்சலிக் குறிப்பேட்டில் தனது இரங்கலை பதிவுசெய்தார்.

## உஷ்



புதிய அமைச்சர்கள் 12 பேர் இன்று ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், நேற்று இரவுவரை அமைச்சர்கள் பெயர்ப் பட்டியலை தயாரிப்பதில் இழுபறி நிலைமை இருந்தது. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை எப்படியாவது பட்டியலில் சேர்க்க முயற்சிகள் எடுக்கப்படுவதாக தகவல். அவரின் பெயர் சேர்க்கப்பட்டால் மட்டுமே இதர பொதுஜன பெரமுன எம்.பிக்கள் பதவியேற்பார்களென தெரிகிறது. அரசியலில் எதுவும் நடக்கலாம். இன்று மாலைவரை காத்திருப்போம்.

மீண்டும் அபான்ஸ் கேஸ் குக்கர்களால்
சுலபமாக சமைப்போம்

வீட்டுப்பாவனை மின் உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது
தெரிவுசெய்யப்பட்ட கேஸ் குக்கர்களுக்கு
ரூ. 1500/- பெறுமதியான தள்ளுபடி வவுச்சர் இலவசம்!





சாதாரண விலை ரூ. 12,990 இலிருந்து

தள்ளுபடி விலை ரூ. 8,490 இலிருந்து

விசேட விலை ரூ. 9,990 இலிருந்து

0115 999 000

நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில்.
இச்சலுகை செப்டெம்பர் மாத இறுதிவரை மாத்திரம்.

Abans

# நாட்டு மக்களை தண்டித்து உரிமைகளைப் பறிக்க வேண்டாம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

மக்களை தண்டனைக்கு உட்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென அரசாங்கத்தை கோருவதாகவும், மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு மாறாக அவற்றை பாதுகாக்குமாறு வலியுறுத்துவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நடிகை தமிதா அபேரத்னவை சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பொதுமக்களின் ஆர்ப்பாட்டத்துக்கு தலைமைத்துவம் வழங்கிய நடிகை தமிதா போன்ற துறைசார் நபர்களை தற்போதைய அரசாங்கம் தண்டிப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். கருத்துச் சுதந்திரம், பொதுமக்களின் உரிமை என்பவற்றை யாராலும் பறிக்கமுடியாது. மக்களை தண்டனைக்கு உட்படுத்த முடியாது. இன்று இளைஞர் சமூகத்தை தண்டனைக்கு உட்புகுத்துகிறார்கள். போராட்டத் தலைவர்கள், சிவில் சமூகத்தினர் போன்றோரை தண்டனைக்கு உட்புகுத்துகிறார்கள்.

இது ஜனநாயக நாட்டில் இடம்பெறக்கூடாத செயற்பாடாகும். மக்களை தண்டனைக்கு உட்புகுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென அரசாங்கத்தைக் கோருகிறோம். மேலும், மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு மாறாக அவற்றை பாதுகாக்குமாறு கோருகிறோம். அரசியல் கைதிகளை உருவாக்கும் கொள்கையுடைய அரசாங்கங்களுக்கு இந்த நாட்டில் இடமில்லை - என்றார்.

## உள்ளகப் பொறிமுறையே...

இலங்கை அரசாங்கம் சார்பில் பேரவையில் கலந்துகொண்டுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, பொருளாதாரக் குற்றங்கள் குறித்து ஐ.நா. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் சாசனத்தை மீறுவதாக குற்றஞ்சுமத்தினார்.

பல்வேறு சவால்கள், கடுமையான தடைகள் இருக்கின்ற போதிலும் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதில் சுயாதீனமான உள்நாட்டு நிறுவனங்களின் ஊடாக முன்னேற்றத்தை அடைய முடியுமென நம்புவதாக அலி சப்ரி மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன், உயர்ஸ்தானிகரின் தீர்மானங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பரிந்துரைகளை மீண்டும் திட்டவட்டமாக நிராகரிப்பதாகவும் கூறினார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வு அதன் தலைவர் பெட்றிகோ வில்லெகஸ் தலைமையில் நேற்று (12) இலங்கை நேரப்படி பிற்பகல் 12.30இற்கு ஆரம்பமானது. இலங்கை குறித்த அறிக்கையை பதில் ஆணையாளர் நாடா அல்-நாஷிப் பிற்பகல் 03 மணிக்கு சமர்ப்பித்து விவாதத்தை ஆரம்பித்துவைத்தார்.

இலங்கையில் தேசிய மட்டத்தில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறலுக்கான முன்னேற்றம் இல்லாத நிலையில், சர்வதேச சட்டத்தின்கீழ், குற்றங்களை விசாரிப்பதற்கும் பொறுப்புக்கூறல் முயற்சிகளை முன்னெடுப்பது தொடர்பிலும் தமது அறிக்கையில் அவர் பிரஸ்தாபித்தார்.

இலங்கையின் புதிய அரசாங்கம், மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கு ஒரு தேசிய உரையாடலைத் தொடங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து இலங்கை சார்பில் தமது நிலைப்பாட்டை அறிவிப்பதற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரிக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அமைச்சர் அலி சப்ரி, ஐ.நா. ஆணையாளரின் அறிக்கையில் தவறான உள்ளடங்கல் உள்ளதாக மேற்கோள் காட்டி கருத்து வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் அவற்றை முன்னெடுப்பதற்கும் மனித உரிமைகள் பேரவையுடனான ஒத்துழைப்பு, உரையாடல்களை ஈடுபாட்டுடன் தொடர நாம் வலியுறுத்துகிறோம்.

நாம் 46/1 தீர்மானத்தை திட்டவட்டமாக நிராகரித்த போதிலும் எங்கள் உறுதிப்பாட்டுக்கிணங்க மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கு விரிவான பதிலை எழுத்துமூலமாக வழங்கியுள்ளோம்.

நமது மக்கள் எதிர்நோக்கியுள்ள சமூக, பொருளாதார சவால்கள் குறித்து அரசாங்கம் மிகவும் ஆழமாக அவதானம் செலுத்தியுள்ளது. அத்தியாவசியப் பொருட்களை வழங்கி அவர்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்த பல்நோக்கு நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் அதிகாரிகள்மட்ட உடன்பாடு எட்டப்பட்டுள்ளதுடன், கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.



பதில் ஆணையாளர் நாடா அல்-நாஷிப்

ஜனநாயகக் கோட்பாடுகளையும் நெறிமுறைகளையும் நீண்டகால அடிப்படையில் நிலைநிறுத்துவதற்கு சமீபகாலமாக அர்ப்பணிப்புடனான மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

அரசியலமைப்பின் பிரகாரம் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கும் கருத்து வெளியிடுவதற்குமான ஜனநாயகம் வழங்கப்பட்டுள்ளது. அதனை உறுதிப்படுத்துவதற்காக அரசியல் நோக்கங்களை அடையும் நோக்கில் சட்டத்தை மீறும் வகையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சில நடவடிக்கைகள் அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டன.

பல்வேறு சவால்கள், கடுமையான தடைகள் இருக்கின்றபோதிலும் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதில் சுயாதீனமான உள்நாட்டு நிறுவனங்களின் ஊடாக முன்னேற்றத்தை அடைய முடியும் என இலங்கை உறுதியாக நம்புகிறது.

மனித உரிமைகள் பேரவையின் பல உறுப்பு நாடுகளுடன் இணைந்து 46/1 தீர்மானத்தை இலங்கை எதிர்த்துள்ளதுடன், அதன் சட்டபூர்வ தன்மை மற்றும் நோக்கங்களுடன் உடன்படவில்லை.

குறிப்பாக, பிரேரணையின் 06ஆவது பத்தி, இலங்கை மக்களின் இறையாண்மையையும் ஐக்கிய நாடுகள் சாசனத்தின் கோட்பாடுகளையும் மீறுவதாக நாம் தொடர்ச்சியாக எடுத்துரைத்துள்ளோம்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடையதான உயர்ஸ்தானிகரின் தீர்மானங்கள், பரிந்துரைகளை மீண்டுமொருமுறை திட்டவட்டமாக நிராகரிக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

உயர்ஸ்தானிகரின் அறிக்கையில், 'பொருளாதார குற்றங்கள்' குறித்து விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை காணமுடிகிறது. சொற்பிரயோகத்திலுள்ள தெளிவின்மையே தவிர, அவ்வாறானதொரு குறிப்பு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் சாசனத்தை மீறுவதாக அமைந்துள்ளமை கவலைக்குரியதாகும்.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபை பிரேரணைகளான 60/251, 48/141 மற்றும் ஐபி தொகுப்பு ஆகியவற்றை கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை குறிப்பிட விரும்புகிறோம்.

நாட்டில் முன்மொழியப்பட்டுள்ள 22ஆவது திருத்தம், ஜனநாயக நிர்வாகத்தை வலுப்படுத்துவதாக மற்றும் முக்கிய நிறுவனங்களின் சுயாதீன மேற்பார்வை, ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரம் உள்ளிட்ட பல மாற்றங்களை அறிமுகப்படுத்துகிறது.

நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட நடவடிக்கைகள் அர்த்தமுள்ளதாகவும் நிலையானதாகவும் இருக்க வேண்டுமானால் குறித்த நாட்டின் சட்ட கட்டமைப்புக்கு இசைவானதாகவும் மக்களின் அபிலாஷைகளுக்கு பொருத்தமானதாகவும் இருக்கவேண்டும்.

நம்பகமான, உண்மையைக் கண்டறியும் பொறிமுறையொன்றை அரசியலமைப்புக்கு உட்பட்டு ஸ்தாபிக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அதற்குப் பொருத்தமான திட்ட வரைவு கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளது.

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்கள் மற்றும் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுவிப்பதற்கான பரிந்துரைகளை முன்மொழிந்துள்ளது. மேலும் பல பரிந்துரைகள் கிடைக்கப்பெறவுள்ளன.

மேலும், வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கான அலுவலகத்தை நிறுவுவதன் மூலம் அனைத்து சமூகங்களையும் இணைக்கக்கூடிய தொடர்புகள் விரிவுபடுத்தப்படும்.

சர்வதேச ரீதியிலான சிறந்த நடைமுறைகளுக்கேற்ப, மனித உரிமைகளை மேம்படுத்தும் வகையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு தேசிய பாதுகாப்புச் சட்டத்தை கொண்டுவரவுள்ளோம்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து 13 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், சொந்த அபிலாஷைகளுடன் வாழக்கூடிய புதிய தலைமுறை உருவாகியுள்ளது.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான பிரச்சினைகளை உள்நாட்டுச் செயல்முறையின் கீழ் விரிவாக கையாள எதிர்பார்க்கும் அதேவேளை, ஒரு தசாப்தத்துக்கும் மேலாக இந்தச் சபையில் தொடரும் தீர்மானத்தின் பாதையை யதார்த்தமாக்கவேண்டிய நேரம் இதுவெனக் கருதுகிறோம் என அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இதேவேளை, பல்வேறு நாடுகள் இலங்கை குறித்து தமது விவாதங்களை முன்வைத்தன.

**அவுஸ்திரேலியா**

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை குறித்த அறிக்கையை வரவேற்கிறோம். மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் மேம்பாட்டுக்காக இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறோம்'' - என அவுஸ்திரேலிய பிரதிநிதி அங்கு தெரிவித்தார்.

***சீனா***

"மனித உரிமைகள் பேரவையின் 46/1 பிரேரணையானது அந்நாட்டின் உள்ளக ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இலங்கை எதிர்நோக்கியிருக்கும் சவால்களிலிருந்து மீள முடியும் என நாம் நம்புகிறோம்.

இலங்கையின் தற்போதைய நிலைமையை பயன்படுத்தி ஏதேனும் நாடுகள் இலாபம் தேட முயற்சித்தால் நாம் அதனை எதிர்ப்போம். இலங்கை சுயாதீன நாடாக சமூக, பொருளாதார நிலைமையை கட்டியெழுப்புவதையே நாம் விரும்புகிறோம்" - இவ்வாறு சீனா தனது நிலைப்பாட்டை பேரவையில் அறிவித்தது.

# இராஜாங்க அமைச்சரானார் பிரேமலால் ஜயசேகர



இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர, துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று (12) நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் பதவிப்பிரமாணம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கையின்போது நபர் ஒருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி கொலைசெய்தமை, இருவரை காயப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காக பிரேமலால் ஜயசேகர கைதுசெய்யப்பட்டிருந்தார். சொக்கா மல்லி என்று அழைக்கப்படும் பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூவருக்கு 2020ஆம் ஆண்டு ஜூலை 31ஆம் திகதி இரத்தினபுரி மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்தது.

அதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 13ஐ அமுல்படுத்துங்கள்...

அதிகாரங்களை வழங்கவும், மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்தவும் இந்தியா அழைப்பு விடுத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான அதன் பிரதிநிதி இந்திரா மணி பாண்டே தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் அமைதி மற்றும் நல்லிணக்கம் குறித்த இந்தியாவின் நிலையான பார்வையானது, இலங்கைத் தமிழர்களுக்கு நீதி, அமைதி, சமத்துவம் மற்றும் கண்ணியத்தை உறுதிசெய்யும் வகையில், ஐக்கிய இலங்கையின் கட்டமைப்பிற்குள் அரசியல் தீர்வாகும்" என்றும் பாண்டே கூறினார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள தற்போதைய நெருக்கடியானது கடனால் இயங்கும் பொருளாதாரத்தின் வரம்புகளையும் அது வாழ்க்கைத்தரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் நிரூபித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

"இலங்கைப் பிரஜைகளின் ஆற்றலைக் கட்டியெழுப்புவதும், அவர்களின் வலுவூட்டலை நோக்கிச் செயற்படுவதும் இலங்கையின் சிறந்த நலன்களாகும், இதற்கு அடிமட்டத்திற்கு அதிகாரப்பகிர்வு சிறந்ததாகும்" என அவர் தெரிவித்தார்.

முன்கூட்டியே தேர்தல்களை நடத்துவதன் மூலம் மாகாண சபைகளை செயற்படுத்துவதன் மூலம் இலங்கையின் அனைத்துப் பிரஜைகளும் வளமான எதிர்காலத்திற்கான தமது அபிலாஷைகளை அடைய முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கோணேஸ்வர ...

பிரச்சினையை பிரஸ்தாபித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அந்த ஆலய வளவில் இடம்பெறும் செயற்பாடுகள் புனித பிரதேசம் என்ற அந்தஸ்தை இல்லாமற்செய்திருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை விரிவாகக் கேட்டறிந்த ஜனாதிபதி ரணில், தமக்கும் அவ்வாறான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், இந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவுடன் இணைந்து திருகோணமலைக்கு சென்று ஆராயுமாறும் அமைச்சர் டக்ளஸை கேட்டுள்ளார்.

இதற்கமைய அடுத்த வாரம் அமைச்சர்கள் குழு திருகோணமலைக்கு சென்று அங்கு நிலைமையை பார்வையிடவுள்ளது.

## மட்டக்களப்பிலிருந்து...

***(கனகராசா சரவணன்)***

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மற்றும் ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் பெண்கள் உட்பட 10 பேரை கொழும்பிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மாவட்டத்திலுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சபை உறுப்பினர், அரசியல்வாதிகள், ஒரு சில ஊடகவியலாளர்கள், பெண்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட 10 பேரை முறைப்பாடுகள் தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்கு கடந்த வாரம் தொடக்கம் ஒவ்வொருவருக்கும் திகதி குறிப்பிட்டு, தமது காரியாலயத்துக்கு வருமாறு கடிதங்களை அவர்களது வீடுகளுக்கு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் சென்று கையளித்துள்ளனர்.

இந்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் ஒவ்வொருவருக்கு திகதி குறிப்பிட்டு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் குறிப்பிட்ட திகதிகளில் கொழும்பிலுள்ள அவர்களது காரியாலயத்துக்கு சென்று வாக்குமூலம் வழங்கி வருவதாகவும் இது அவர்களுக்கு எதிரான முறைப்பாடுகளுக்கு வாக்குமூலம் பெறுவதற்காகவே அவர்கள் அழைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். இதேவேளை, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் அழைக்கப்பட்டவர்கள் பலபேர் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதத்...

***(யாழ். செய்தியாளர்)***

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்துவரும் இளைஞர்களை விடுதலைசெய்யக் கோரி யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக நேற்று (12) முதல் உணவுத் தவிர்ப்புப் போராட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மெகசின் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுவரும் இளைஞர்களின் உறவினர்களே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

2019, 2020 ஆகிய காலப்பகுதிகளில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 12 பேர், தமது விடுதலையை வலியுறுத்தி கொழும்பு மெகசின் சிறைச்சாலையில் கடந்த 06ஆம் திகதிமுதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், அவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் இளைஞர்களின் உறவினர்கள் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் உறவுகளை விடுதலை செய், சிறுபிள்ளைகளின் எதிர்காலத்தை சிறையில் சிதைத்து விடாதே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டக்காரர்கள் தாங்கிப் பிடித்திருந்தனர்.

## தேசிய சபை...

குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால தேசிய கொள்கைகளை உருவாக்குவதற்கு வழிகாட்டுதல் மற்றும் பொருளாதார ஸ்திரப்படுத்தல் தொடர்பான குறுகிய மற்றும் நடுத்தர கால பொது திட்டங்கள் குறித்த உடன்பாட்டை எட்டுவதே இந்த தேசிய சபையை நிறுவுவதன் நோக்கமாகும்.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த முப்பத்தைந்துக்கு மேற்படாத எம்.பிக்கள், பிரதமர், நாடாளுமன்ற அவைத் தலைவர், தலைவர் ஆகியோரைக்கொண்ட தேசிய சபை என்ற நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று இருக்கவேண்டுமென நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ள பிரேரணை கூறுகிறது.

துறைசார் மேற்பார்வைக் குழுக்கள், பொது நிதிக்கான நாடாளுமன்றக் குழு, அரசாங்கக் கணக்குகளுக்கான நாடாளுமன்றக் குழு, பொது நிறுவனங்களுக்கான நாடாளுமன்றக் குழு, வங்கி மற்றும் நிதிச் சேவைகளுக்கான குழு, திட்டமிடல் மற்றும் வழிமுறைகளுக்கான குழு, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் பொது நிதிக்கான குழு ஆகிய எந்தவொரு குழுவிலிருந்தும் அறிக்கைகளைக் கோரும் அதிகாரம் தேசிய சபைக்கு இருக்கவேண்டும் எனவும் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

தேசிய சபையின் கோரம் பத்து உறுப்பினர்களைக்கொண்டதாக இருக்க வேண்டும் என்றும், குழுவின் முழு அனுமதியைப் பெறாமல் தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்துகொள்ளாத எந்தவொரு உறுப்பினரும் குழுவின் உறுப்பினர் பதவியை கைவிட்டதாகக் கருதப்படுவார்கள் என்றும் பிரேரணையின் முன்மொழிவு கூறுகிறது.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அண்மையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் கூடிய கட்சித் தலைவர்கள், தேசிய சபையொன்றை அமைப்பதற்கான பிரேரணையை முன்வைத்து நிறைவேற்ற தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோழி இறைச்சி...

நாட்டில் மரக்கறி மற்றும் கோழி இறைச்சி என்பவற்றின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதாக வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

புறக்கோட்டையில் கோழி இறைச்சி கிலோ ஒன்று ஆயிரத்து 400 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், மலைநாட்டு மரக்கறிகளின் விலைகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

கரட் கிலோ ஒன்றின் சில்லறை விலை 400 ரூபாவாகும். ஒரு கிலோ கிராம் போஞ்சி மற்றும் கறி மிளகாய் என்பன 600 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றன.

பாகற்காய் கிலோ ஒன்று 400 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

## தமிதாவுக்கு...

கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட அவரை, தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சீரப் பிணைகளில் செல்ல உத்தரவிடப்பட்டுள்ளது.

பத்தரமுல்லை, தியத்த உயன பகுதியில் வைத்து, கடந்த 07ஆம் திகதி கொழும்பு வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் தமிதா அபேரத்ன கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

ஜனாதிபதி செயலகத்திற்குள் கடந்த மே மாதம் 09ஆம் திகதி அத்துமீறி நுழைந்தமை தொடர்பில் தமிதா அபேரத்ன கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கோணேசர் ஆலய...

வரலாற்றுப் பிரசித்திமிக்க திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் அபகரிப்பு நடவடிக்கைகளை உடனடியாகதடுத்து நிறுத்த வலியுறுத்துவதெனவும், தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று முன்தினம் (11) யாழில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

மாவை சேனாதிராசா, த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சி.வி.விக்னேஸ்வரன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய பகுதியில் மேற்கொள்ளப்படும் அபகரிப்பு தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

ஆலயத்திற்கு சொந்தமான 19 ஏக்கர் காணியில் மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளை நிறுத்தும்படியும், ஆலய நிர்வாகத்தின் அனுமதி பெற்றே நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வலியுறுத்த தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக ஆதாரங்களுடன் கடிதமொன்றை தயாரித்து ஜனாதிபதியிடம் கையளிக்க தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசுவதற்கு நேரம் ஒதுக்கும்படி கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## நெருக்கடியிலிருந்து...

தெற்காசிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கெனிச்சி யோகோயாமா தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கெனிச்சி யோகோயாமா உள்ளிட்ட பிரதிநிதிகள் நேற்று (12) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தபோதே பணிப்பாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் இருதரப்பு ஒத்துழைப்பை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு துறைகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடத் தூதுக்குழுப் பணிப்பாளர் சென், பிரதிப் பணிப்பாளர் உத்சவ் குமார் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட பலர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## ஆறாவது தடவையாக...

இலங்கை அணியும் நேற்று முன்தினம் டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேருக்கு நேர் மோதின. பாகிஸ்தான் அணியுடன் முன்னதாக நடைபெற்ற போட்டியில் வெற்றிபெற்ற முனைப்புடன் களமிறங்கிய இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை பெற்றது. அதன்படி முதலில் ஆடிய இலங்கை அணி ஆரம்பத்தில் தடுமாற்றத்தை எதிர்கொண்டது. 5 விக்கெட் இழப்பிற்கு 58 ஓட்டங்களைப் பெற்று தடுமாறிக்கொண்டிருந்த வேளையில் பானுக ராஜபக்ஷ மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோரின் இணைப்பாட்டம் இலங்கை அணிக்கு வலு சேர்த்தது.

ஹசரங்க 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் கூட இறுதிவரை களத்தில் நின்று அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய பானுக ராஜபக்ஷ 71 ஓட்டங்களைக் குவிக்க, இலங்கை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களைக் குவித்தது. 171 என்ற சவாலான இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் முதல் இரண்டு விக்கெட்டுகள் அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டன.

எனினும், மொஹமட் றிஸ்வான் மற்றும் இப்திகார் அஹமட் ஆகியோர் ஓட்டங்களை மெதுமெதுவாக நகர்த்திக்கொண்டு செல்ல போட்டி பாகிஸ்தானின் பக்கம் மாறியது. ஆனால், போட்டியின் 17ஆவது ஓவரில் வனிந்து ஹசரங்க 3 விக்கெட்டுகளை அடுத்தடுத்து வீழ்த்த வெற்றி வாய்ப்பு இலங்கை அணியின் பக்கம் மாறியது. பாகிஸ்தான் அணி இறுதியில் 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 147 ஓட்டங்களை மாத்திரம் பெற 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றிபெற்று ஆறாவது தடவையாக ஆசியக்கிண்ணத்தை முத்தமிட்டது.

போட்டியின் ஆட்டநாயகனாக பானுக ராஜபக்ஷ தெரிவான அதேவேளை, தொடர் ஆட்டநாயகனாக 9 விக்கெட்டுகளையும், 66 ஓட்டங்களையும் குவித்த இலங்கை அணியின் சுழற்பந்துவீச்சாளர் வனிந்து ஹசரங்க தெரிவானார்.

# சகவாழ்வையும் சமத்துவமான மொழி மேம்பாட்டையும் ஊக்குவிக்க கண்டி மாவட்டத்தில் வேலைத்திட்டம்

## நோக்கங்களை உள்ளார்ந்த ரீதியாக விளங்கிக்கொள்ளும் விடயத்தில் சிக்கல் நிலவுவதாக மேலதிகச் செயலாளர் ஜயரத்ன தெரிவிப்பு





(இக்பால் அலி)

மனித அபிவிருத்தி தாபனம் இனங்களுக்கிடையே சகவாழ்வையும் சமத்துவமான மொழி மேம்பாட்டையும் ஊக்குவித்து வருவதாக கண்டி மாவட்ட மேலதிகச் செயலாளர் ஜே.பீ.யூ.கே. ஜயரத்ன தெரிவித்தார்

மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்திய, மொழி உரிமைகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்புத் திட்டம் சம்பந்தமான கண்டி மாவட்டத்தில் திட்ட வளர்ச்சி பற்றிய செயலமர்வு கண்டி டெவோன் ரெஸ்டூரனில் மனித அபிவிருத்தித் தாபனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பி.பி.சிவப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்,

கொரோனா காலகட்டத்தில் விசேடமாக உலருணவுப் பொதிகள் இந்த நிறுவனத்தின் ஊடாகக் கிடைக்கப்பெற்றன. தெல்தோட்டை மற்றும் பாத்ததும்பர பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இந்நிறுவனத்தின் மூலம் உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை விசேடமாக இனங்களுக்கிடையே சகவாழ்வையும் நல்லுறவையும் ஏற்படுத்தும் மிக முக்கியமான விடயமாகும்.

எமது பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள உரிய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகளைக்கொண்டு இவர்கள் செயற்பட்டு வருகின்றனர். இந்நிறுவனத்தினர்களுக்கு எமது அரச அதிகாரிகள் உதவி வருகின்றனர். அந்த வகையில் அவர்களுடைய வேலைத்திட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்து வருகிறது.

தெல்தோட்டை பிரதேச செயலகத்தைப் பொறுத்தவரையில் பல்லின சமூகங்கள் வாழும் பிரதேசமாகும். பன்விலை பிரதேச செயலகத்தைப் பொறுத்தவரையிலும் தமிழ் மக்கள் நூற்றுக்கு 62 விகிதம் அதிகம் வசிக்கும் பிரதேசமாகும். மூவின மக்களும் வாழ்கின்றனர். தொகையில் சிற்சில வேறுபாடுகள் உள்ளன. இந்த இரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நான் கடமையாற்றியுள்ளேன். தெல்தோட்டை பிரதேசத்தில் இனங்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படும் காலகட்டத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவ்வாறான முரண்பாடுகள் ஏற்படுவதில்லை. மக்களுக்கிடையே சகவாழ்வும் நல்லுறவும் காணப்படும் பிரதேசமாகும். அந்தவகையில் நான் சந்தோஷமடைகின்றேன்.

அதேபோன்று கடந்த 2018ஆம் ஆண்டில் நடைபெற்ற கலவர சம்பவங்களின்போதும் தெல்தோட்டையில் எந்தவிதமான கலவரங்களும் இடம்பெறவில்லை. இனங்களுக்கிடையே சகவாழ்வு காணப்படும் பிரதேசம். இவை அங்கு வேலை செய்கின்றவர்களுக்கு நன்கு தெரியும். மக்களிடையே சகவாழ்வு இருப்பதை அறிந்து கொள்வார்கள். ஏனைய பிரதேச செயலகங்களில் சகவாழ்வு இல்லை என்று சொல்லவில்லை. அவ்வாறு சகவாழ்வு ஏற்படுவதை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு அதிகம் இருக்கிறது.

ஒரு வேலைத்திட்டத்தின் இலக்கை முழுமையாக நிறைவேற்றியுள்ளோமா அல்லது அந்த இடத்தை அடைந்துவிட்டோமர் என்பதைப் பற்றி மதிப்பீடு செய்யவேண்டும். எம்மால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தின் நோக்கத்தின் மூலம் எந்தளவு மக்கள் பயனைப் பெற்றுள்ளார்கள் என்பதையும் அவதானிக்க வேண்டும். இவற்றைப் பார்த்துத்தான் எஞ்சிய வேலைத்திட்டத்தை செய்வதற்கான ஒழுங்குகளை ஏற்படுத்த வேண்டும். வெற்றி தோல்விக்கு மேலாக மேலும் முன்னேற்றகரமான பாதையில் இட்டுச்செல்வது எப்படி என்பதை ஆராய்ந்தால் மாத்திரமே வேலைத்திட்டங்கள் மிகுந்த பயனுள்ளதாக அமையும்.

சகவாழ்வை எடுத்துக்கொண்டால் அரச சார்பற்ற நிறுவனம் தொடர்புபட்டுள்ள பிரதேச செயலகத்தின் அதிகாரி என்ற வகையில் சகவாழ்வு சமாதான செயற்பாடுகளுக்கு வெளிநாடுகளிலிருந்து அதிகளவிலான நிதி உதவிகள் கிடைக்கின்றன. அதிகளவிலான வெளிநாட்டு நிறுவனங்கள் எமது தாய்நாட்டின் மேம்பாட்டுக்காகவே செயற்படுகின்றன. சகவாழ்வு என்ற விடயத்தை நாம் விளங்கிக் கொள்வோமாயின் அதில் வித்தியாசம் இருக்கிறது. அந்த மாற்றத்திற்கு கௌரவம் அளித்தல் வேண்டும். அந்த மாற்றத்தின் சவால்களை விளங்கிக்கொண்டு நடத்தல் வேண்டும்.

வேலைத்திட்டமொன்றை உள்ளார்ந்த ரீதியாக விளங்கிக்கொள்வதில் எமக்கிடையில் சிக்கல் இருக்கின்றது. இவற்றை உள்ளார்ந்த ரீதியாக பெற்றுக்கொண்டுள்ளார்களா, வெளிப்படையாக சென்றடைந்துள்ளதா என்பது தொடர்பில் சில பகுதிகளில் நான் அவதானித்தேன். உண்மையிலேயே உள்ளார்ந்த ரீதியாக பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

உள்ளார்ந்த ரீதியாக நோக்கத்தை அடைய முடியவில்லை என்றால், எத்தகைய பிரசாரங்களை முன்னெடுத்தாலும் எங்களுடைய இலக்கை அடைந்துகொள்ள முடியாது. எமது நோக்கங்கள் மக்கள் மத்தியில் சென்றுள்ளதா என்பதை தேடிப்பார்த்து அதன் குறை நிறைகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் செயற்றிட்ட அதிகாரி திருமதி லோகேஸ்வரி உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். தேசிய சமத்துவமான மொழி மூலத்தைக் கற்றுக் கொள்ள சிங்கள, தமிழ் பாடசாலை மாணவர் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.



இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திற்கு சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு, பிரித்தானிய அரச குடும்பத்திற்கும் அந்நாட்டு மக்களுக்கும் தனது இரங்கலைத் தெரிவித்தார். பின்னர் அங்கு வைக்கப்பட்டிருந்த சிறப்பு நினைவுக் குறிப்பேட்டில் தனது இரங்கல் குறிப்பையும் பதிவிட்டார்.

# அண்ணனின் சடலத்தினருகே மயங்கி விழுந்து உயிரிழந்த தங்கை



## களுத்துறையில் துயரம்

தனது சகோதரனின் திடீர் மரணத்தால் அதிர்ச் சியடைந்த அவரது தங்கை மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவமொன்று களுத்துறை பிரதேசத் தில் இடம்பெற்றுள்ளது.

தனியார் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த 42 வயதுடைய அசேல சுரங்க சில்வா என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவர் கடந்த சனிக்கிழமை நெஞ்சுவலியால் மரணமடைந்தார்

இந்நிலையில், நேற்று முன்தினம் அவரது இறுதிக்கிரியைகளை மேற்கொள்ளத் தயாராகும் வேளையில் அவரது இளைய சகோதரியான 31 வயதான அகம்பொடி ரங்கி துலாஞ்சனி சில்வாவும் சடலத்திற்கு அருகில் விழுந்து உயிரிழந்துள்ளார். அவர்களின் மரணத்தின் பின்னர், அசேல சுரங்கவின் மகள், மகன், மைத்துனர் மற்றும் மாமி ஆகியோர் அதிர்ச்சி காரணமாக களுத்துறை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.



இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவையிட்டு கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் வைக்கப்பட்டுள்ள அனுதாப குறிப்புப் புத்தகத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் நேற்று (12) தமது இரங்கலைப் பதிவு செய்தார். அதன்போது பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹுல்டன் உடனிருந்தார்.

# "கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்"

## 43ஆவது நாள் கவனயீர்ப்புப் போராட்டம் திருமலையில்







(மன்னார் நகர் நிருபர்)

"கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" எனும் தொனிப்பொருளில் வடக்கு - கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களில் இடம்பெற்றுவரும் 100 நாட்கள் செயல் திட்டத்தின் 43ஆவது நாள் கவனயீர்ப்புப் போராட்டம் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், மல்லிகைத்தீவு பிரதேசத்தில் நேற்று (12) இடம்பெற்றது.

இப்போராட்டமானது திருகோணமலை மாவட்ட பாதிக்கப்பட்ட மக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும். எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்றுகூடுவது எங்கள் உரிமை என பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக வருகைதந்ததுடன், தங்களின் உரிமை கோரிக்கையையும் முன்வைத் தனர்.

குறித்த நிகழ்வில் கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்கள், வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பணியாளர்களும் கலந்துகொண்டார்கள்.

குறித்த செயல் திட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்களால் 100 நாள் செயற்திட்டத்திற்கான பொது மகஜர் வாசிக்கப்பட்டதுடன், வருகை தந்த பொதுமக்களுக்கு அரசியல் தீர்வுத் திட்டம் மற்றும் 13ஆம் திருத்தசட்டம் தொடர்பான சாதக பாதக விளைவுகள் தொடர்பாக தெளிவுபடுத்தல் வழங்கினார். அதேநேரம் அரசியல் தீர்வு விடயத்தில் மக்களின் கருத்துகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான கருத்துகளும் உள்வாங்கப்பட்டன. குறித்த போராட்டம் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கைதிகளை பார்வையிடச் சென்ற பெண்களை மோசமாக சோதனை செய்த அதிகாரிகள்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு



தமிழ் அரசியல் கைதிகளை பார்வையிடச் சென்ற அவர்களது உறவினர்களான பெண்களை மிகவும் மோசமாக சோதனை செய்து அவர்களை அசிங்கப்படுத்தியதுடன், இனவாதமாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் நடந்துகொண்டுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிலுள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அலுவலகத்தில் நேற்று (12) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கைதிகள் தினத்தை முன்னிட்டு தங்களது உறவுகளை சிறைச்சாலைகளில் பார்வையிடச் சென்ற சொந்தங்கள் மிக மோசமான முறையில் பரிசோதனை செய்யப்பட்டுள்ளார்கள். பெண்கள் மிகவும் வன்மையான முறையில் சோதிக்கப்பட்டுள் ளார்கள். தவறான வார்த்தைகளை பிரயோகித் துள்ளார்கள். சிறைச்சாலையிலுள்ள தேவதாசன் என்பரை பார்க்கச் சென்ற அவரது மகளை மிக மோசமாக பரிசோதனை செய்த நிலையில் அந்தச் சகோதரி அதற்கு எதிர்ப்பைக் காட்டியபோது அவர்கள் சிங்களத்தில் இது எங்களது சிங்கள நாடு எனக் கூறியுள்ளார்கள். மிகவும் இனவாதத்தோடு மோசமாக சிறை அதிகாரிகள் நடந்துகொண்டுள்ளார்கள்.

சிறைச்சாலை தினம் என்பது எல்லோரும் வந்து பார்வையிடும் ஒரு தினம். நவீன முறையில் பல சிறைச்சாலைகளில் பரிசோதனை முறைகள் உள்ளன. அதைவிடுத்து இனத்துவேசத்தோடு மிகவும் மோசமாக நடந்துகொண்டதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கும் கடிதம் மூலம் தெரியப்படுத்தவுள்ளோம்.

இவ்வாறான நிலையில் இந்த நாட்டில் தமிழ் மக்களின் தீர்வையும், அவர்களது உணர்வுகளையும், சரிசெய்வதென்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஜனாதிபதி தனது உரையில் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றார். ஆனால் அதற்கு நேருக்கு மாறாக பல விடயங்கள் நடந்து வருகின்றன.

நிலங்கள் தொடர்ந்தும் அபகரிக்கப்பட்டு வருகின்றன. அரசியல் கைதிகள் விடுதலை கேள்விக்குறியாகவுள்ளது. அவர்கள் தற்போது உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுக்கு எமது ஆதரவு உண்டு. அவர்களது விடுதலைக்காக நாங்கள் முயற்சிப்போம். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் சொல்லப்பட்ட விடயங்களை நிறைவேற்றாவிட்டால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்காது.

சிறைகைதிகளின் விடுதலை நடைபெறவில்லை. பார்வையிடச் செல்பவர்கள் கூட பாதிக்கப்பட் டுள்ளார்கள். நிலங்களை அபகரிக்கும் நிலை தொடர்கிறது. பத்திரிகையாளர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், தேசத்திற்காக குரல் கொடுத்த வர்கள் என பலரை ரிஐடி அழைத்து விசாரணை செய்கிறது. வடக்கு, கிழக்கில் 15 பேருக்கு மேல் அழைக்கப்பட்டுள்ளார்கள். நாடாளுமன்றத்திலும் இது தொடர்பில் உரையாற்றியுள்ளோம். எதற்காக இந்த விசாரணை. இது தேவையற்றது.

பொருளாதார நெருக்கடியில் இருக்கும் நிலையில் அதனை நிவர்த்திசெய்ய புலம்பெயர் உறவுகளை முதலீடுசெய்ய அழைக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு வரும்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் நொண்டிசாட்டுகளை சொல்லி அதனை பறிக்கப் பார்க்கிறார்கள். இதனை தமிழ்த் தரப்பு தொடர்ந்தும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது. தமிழ் மக்களை நசுக்கிக் கொண்டிருந்தால் இந்த நாடு பொருளாதாரத்தில் நெருக்கடியிலிருந்து மீள முடியாது. எனவே, எமது மக்களது கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, செப்டெம்பர் 13ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# ரணில் அறிவிப்பின் பின்னணி!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வசன வாக்கெடுப்பு தொடர்பில் வெளியிட்டுள்ள அறிவிப்பு அரசியல் வட்டாரங்களில் பேசுபொருளாகியுள்ளது.

தாம் ஜனாதிபதி என்றதும் புதிய அச்சுறுத்தல் பாணி அறிவிப்பு ஒன்றை விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு நாடாளுமன்றத்துக்கு ஆறு மாத கால அவகாசம் கொடுத்திருக்கின்றார் ரணில். அதற்குள் நாடாளுமன்றம் ஒரு முடிவைக் காணாவிட்டால், சர்வசன வாக்கெடுப்பு வைத்து மக்கள் கருத்தைக் கேட்டறிவாரென கூறியுள்ளார்.

மக்கள் விருப்பப்படியான முடிவை நடைமுறைப்படுத்துவது என்றாலும், அது சட்டமாக வேண்டும். வெறும் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் தேர்தல் சட்ட முறைமைகளை உருவாக்கி விட முடியாது. அது நாடாளுமன்றத்தினால்தான் முடியும்.

"அழுதும் அவள்தான் பிள்ளை பெற்றாக வேண்டும்" என்பது போல சட்டத்தை ஆக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு மட்டுமே உண்டு. அதற்கு ஜனாதிபதி அல்ல, யாருமே ஏன் நீதிமன்றம் கூட காலக்கெடு விதிக்க முடியாது.

சர்வசன வாக்கெடுப்பு என்ற மிரட்டல் பாச்சா நாடாளுமன்றத்திடம் பலிக்காது. அது சிரேஷ்ட அரசியல்வாதியான ரணிலுக்குத் தெரியாதா என்ன? அப்படியானால் ஏன் இத்தகைய அறிவிப்பை அவர் விடுத்தார்?

சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா? இப்போது ரணிலின் குடுமி ஆடுவதற்கான காரணத்தை அறிவதற்கு அவர் பிரதமராக இருந்தபோது நல்லாட்சிக் காலத்தில் நடந்த விடயத்தை நாம் நினைவு கூர வேண்டும்.

அப்போது புதிதாக உருவாகி, வேகமாக எழுச்சி பெற்று வந்த பொதுஜன பெரமுனவை மொட்டுக் கட்சியை கண்டு அச்சப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அச்சமயம் தெற்கில் நடத்தப்பட வேண்டிய இரண்டு மாகாண சபைத் தேர்தல்களை அதனால் எதிர்கொள்ளப் பின்னடித்தார். மாகாண சபைத் தேர்தல் சட்டங்களை ஒருங்கு சீரமைக்கிறோம், அதை ஒரு வருடத்தில் முடிப்போம் என்று நாடாளுமன்றுக்கு உறுதி அளித்து, இருந்த மாகாண சபை தேர்தல் சட்டங்களை அப்படியே இரத்தாக்கினார். இப்போது ஐந்து வருடங்கள் கழிந்தும் அந்தத் தேர்தல் சட்டங்களும் வரவில்லை, அதனால் மாகாண சபைத் தேர்தல்களும் நடத்தப்படவும் இல்லை. அந்நிலைமைக்கு ரணிலே முற்றும் முழுதாகக் காரணம். பொறுப்பு.

இப்போது வரும் 20 ஆம் திகதிக்குப் பின்னர் உள்ளூராட்சித் தேர்தலை எந்த நேரத்திலும் தேர்தல் ஆணையம் அறிவிக்க முடியும். அரசமைப்பின் கீழ் ஆணையத்துக்கு அதற்கான அதிகாரம் தெளிவாக உண்டு.

மீண்டும் ஒரு தேர்தல் சீர்திருத்தம் என்ற கதையை அவிழ்த்துவிட்டு, மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைத்த மாதிரி, உள்ளூராட்சித் தேர்தலையும் நிரந்தரமாக தள்ளிப் போட்டு, அதற்கும் ஆப்பு வைக்கத் தயாராகி விட்டார் ரணில்.

புதிய மாகாண சபைத் தேர்தல் சட்டங்கள் ஒரு வருடத்துக்குள் வரும், பொறுங்கள் என அப்போது ஒரு கதையை கூறினார். இப்போது தேர்தல் சீர்திருத்தம் வரப்போகிறது என்பதைக் காட்டி, உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு ஆறு மாதக் காலக்கெடு என்கிறார். மாகாண சபைத் தேர்தல்கள் போல ஆறு வருடங்கள் சென்றாலும் உள்ளூராட்சித் தேர்தல்களும் நடத்தப்படாமல் ஆப்படிப்பதற்கான அவரின் முன்னேற்பாட்டு அறிவிப்புத்தான் இந்தக் காலக்கெடுப் பிரகடனம். இதற்கு நாடாளுமன்றம் உஷாராக இருப்பது அவசியம்.

இப்போதைய நிலைமையில் சர்வசன வாக்கெடுப்புக்கு ரணில் சென்றாராயின், அதில் வரும் முடிவைக்கொண்டு மக்களின் அபிப்பிராயத்தை அறிந்து அதற்கேற்ப சில வியூகங்களை வகுக்கவும் ரணில் எண்ணக் கூடும்.

சர்வசன வாக்கெடுப்புக்கு செல்வதென்பது இலேசான விடயமல்ல. அதுவும் தேர்தலொன்றை நடத்தும் அளவிற்கு செலவைத் தரும். அப்படியானால் ஒத்திவைக்கப்பட்டுள்ள ஏதாவது தேர்தலொன்றுக்கு செல்லாமல் சர்வசன வாக்கெடுப்பு பற்றி ரணில் பேசுவது ஏதோ ஓர் அரசியல் சம்பவத்தை மனதில் வைத்தே. ஆதாயமில்லாமல் செட்டியார் ஆற்றை இறைக்கமாட்டார் என்ற பழமொழி ஊர்வழியே சொல்லப்படுவதுண்டு. ரணிலின் அறிவிப்பும் அப்படியே.

# குழந்தை மொழியை ஊக்குவிப்போம்



இன்றைக்கு ஒரு பொது நிகழ்வில் வரவேற்புரையோ, நன்றியுரையோ சொல்லச் சொன்னால் பலரும் முன்வருவதில்லை. பார்வையாளர்களை உற்சாகப்படுத்தி அறிவுத் தளத்துக்கு நகர்த்தும் விதமாக சிறப்புரையாற்றுவது வேண்டுமானால் கடினமாக இருக்கலாம். நிகழ்வுக்கு வந்துள்ள பலரையும் அவரவர்களின் பெயரைச் சொல்லி "வருக வருக என வரவேற்கின்றேன்" என்றோ "அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்றோ சொல்வதற்குக்கூட பலரும் கூச்சப்படுகின்றனர்.

இதற்கான காரணம் எதுவாக இருக்கும்? ஒன்று அவர்களுக்கு கூச்ச சுபாவம் இருக்கலாம். மற்றொன்று பலர் முன்னிலையில் பேச பயப்படுபவர்களாக இருக்கலாம். அவர்களுக்கு கோவையாக வார்த்தைகளை வெளிப்படுத்தும் பழக்கம் இல்லாதிருக்கலாம். இவ்வாறு இருப்பதில் ஒன்றும் தவறில்லை.

ஆனால், அதே நேரம் பிறந்து வளர்ந்தது முதல் நாம் பேசிப் பழகும் தாய்மொழியில் பேச இவ்வாறான தயக்கம் ஏன் ஏற்படுகிறது? இவ்வாறு உள்ளவர்கள் குழந்தைகளாக இருந்த காலத்தில் இவர்களுக்கு மொழிப் பயன்பாட்டின்போது கிடைத்த பின்னூட்டங்கள் இவர்கள் குணத்தில் பெரும்பங்கு வகிப்பவையாக இருக்கும்.

ஒருவர் பேசுவதற்கு அடிப்படையாக அமைவது அவருக்கு மொழியில் உள்ள புலமை. அந்த புலமைக்கு அடிப்படையாக அமைவது அந்த மொழியிலுள்ள வார்த்தைகளில் தமக்குத் தேவையான வார்த்தையைப் பயன்படுத்த நினைக்கும்போது அது உடனடியாக நினைவுக்கு வருதல். அவ்வாறு நினைவுக்கு வருவதற்கு அடிப்படையாக அமைவது அந்த வார்த்தை அறிமுகமான நெருக்கமான சூழலும், அந்த வார்த்தையின் சரியான பொருள் குறித்த நம்பிக்கையும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தொடர் வாசிப்பின் மூலம் கிடைக்கும் பயிற்சியின் மூலம் வார்த்தைகளைக் கோவையாகப் பயன்படுத்தும் நுட்பம். இவை அனைத்தையும் பெறுவது என்பது ஓரிரு நாள்களில் நடக்கக் கூடியது அல்ல. மாறாக குழந்தைப் பருவத்திலிருந்து மொழியை நெகிழ்வான ஊடகமாகப் பயன்படுத்தக் கிடைத்திருக்கும் வாய்ப்பு.

அடுத்தவர்கள் சொல்வதைக் கேட்பது என்பது ஒரு கலை. இந்தக் கலையை வேறு யாரையும் விட குழந்தைகளே அற்புதமாகப் பயன்படுத்துகின்றனர். நாம் பேசும்போதே அதைக் கேட்பதற்கு பதிலாக உடனுக்குடன் பதில் பேசும் குழந்தைகளும் இருப்பர். அவ்வாறு அவர்கள் பேசுவதை அங்கீகரித்து அவர்களின் கேட்கும் சக்தியை ஊக்குவிக்க வேண்டும். அந்த அளவுக்கு ஏற்ற இறக்கத்துடன் நமது பேச்சு அமையவேண்டும்.

குழந்தையாக இருக்கும்போது எவ்வளவு தூரம் பலரது பேச்சுகளை கேட்பதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளதோ அந்த அளவுக்கு அந்த குழந்தைகளின் மொழிகுறித்த அறிவும் சொற்பெருக்கமும் அதிகரிக்கின்றன. அவ்வாறு கேட்பதை குழந்தைகள் தாமாகப் பயன்படுத்தவும் வாய்ப்புகளை அளிக்க வேண்டும்.

அவ்வாறு பயன்படுத்தும்போது அவர்களுக்குக் கிடைக்கும் அனுபவம் எந்த அளவுக்கு உற்சாகமூட்டுவதாக அமைகிறதோ அந்த அளவுக்கு அந்த குழந்தைகளின் தன்னம்பிக்கை மிகும்.

ஒரு குழந்தை "அப்பா நாளைக்கு வந்தார்" என இயல்பாகப் பேசும். இதனைக் கேட்கும் பலரும் உடனடியாக என்ன செய்வர்? "அப்படிச் சொல்லக்கூடாது, அப்பா நாளைக்கு வருவார் என்று சொல்ல வேண்டும்" என்பர். அக்குழந்தையின் அருகிலுள்ள பெரியவர்கள் அக்குழந்தை மொழித்திறனில் அப்போதே தூய்மை பெறவேண்டும் என்பதன் வெளிப்பாடாகவே இதனைப் பார்க்க வேண்டும்.

ஆனால், இந்த நிலையில் வேறு இரண்டு வாய்ப்புகளும் இருக்கின்றன.

முதலாவது, அக்குழந்தை சொல்வதை அப்படியே ஆமோதிப்பது போல் தலையை ஆட்டி மகிழலாம். இரண்டாவது, மேலே பயன்படுத்திய வார்த்தைகளை அப்படியே பயன்படுத்தி "அப்பா நாளைக்கு வருவாரா?" என்று சரியாகத் திருத்தி நாம் கேட்கலாம். அதாவது "அப்படிச் சொல்லக்கூடாது" என்ற எதிர்மறை வார்த்தைகளைத் தவிர்க்கலாம்.

குழந்தைகள் மட்டுமே சரி, தவறு என்ற பயமின்றி மொழியினை நெகிழ்வான ஊடகமாகப் பயன்படுத்துவர். அவ்வாறு பயன்படுத்தும்போது எவ்வளவுக்கெவ்வளவு அதனை நெகிழ்வாகப் பயன்படுத்தும் வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்படுகின்றதோ, அந்த அளவுக்கு அவர்களுக்கு மொழியின் மீதும், அதனைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் மீதும் நம்பிக்கை அதிகரிக்கும்.

இவ்வாறு குழந்தைகள் நெகிழ்வாகப் பயன்படுத்த அவர்களுக்கு நல்ல வார்த்தைகள் அறிமுகமாக வேண்டும். அதாவது குழந்தைகள் அருகிலுள்ள போது பெரியவர்கள் தரமான வார்த்தைகளை மட்டுமே பயன்படுத்தவேண்டும். குழந்தைகள் இருக்கும் பகுதிகளில் இருக்கும் மொழிச்சூழல் சரியான வார்த்தைகளைக் கேட்கும் சூழலாக அமைய வேண்டும். இது அவ்வளவு எளிதல்ல என்பது உண்மைதான். ஆனாலும், அதனை நோக்கி நாம் சமூகத்தை நகர்த்த வேண்டும்.

இதனை மனதில் கொண்டே கல்வியியலாளர்கள் குழந்தைகளுக்கு கதைகளைச் சொல்லும் பழக்கத்தினைக் கைகொள்ளச் சொல்கின்றனர். இவ்வாறு கதைகளைச் சொல்லும்போது அவர்களுக்கு புதுப்புது வார்த்தைகள் அறிமுகமாகும். பின்னர் அந்த வார்த்தைகளில் சிலவற்றை நினைவில் கொண்டு அவ்வப்போது அவர்கள் பயன்படுத்துவர். அவ்வாறு பயன்படுத்தும்போதும் சில தவறுகளைச் செய்யவே செய்வர். அதனை அங்கீகரித்து மென்மையான முறையில் சரி செய்யும்போது அவர்களது தன்னம்பிக்கை மிகும்.

ஆனால், "மாலை முழுவதும் விளையாட்டு" என்று குழந்தைகள் ஆடிப்பாடிய காலம் இப்போது இல்லை. மாறாக மாலை முழுவதும் தொலைக்காட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு தொடர்களை ஒளிபரப்புகின்றன. அந்த தொடர்களின் கதைகள் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

இப்படிப்பட்ட தொடர்களில் பெற்றோர் லயித்திருக்கும்போது குழந்தைகளும் அவற்றைக் காண வேண்டியதாகிறது. இல்லையேல் அந்த நேரத்தில் அவர்கள் மின்னணு ஊடகங்களில் பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். இது மிகவும் ஆபத்தான போக்கு.

இன்றைய குழந்தைகள் நாளைக்கு அவையில் முந்தியிருந்து நான்கு வார்த்தைகளைத் தொடர்ந்து பேசவேண்டுமானால் அதற்கான அடித்தளம் இன்றைக்கே இடப்பட வேண்டும். அதற்கு பள்ளிக்கு இணையாக, குடும்பமும், சமூகமும் பங்களிப்பு செய்ய முன்வர வேண்டும்.

**முனைவர் என்.மாதவன்**
**நன்றி - தினமணி**

# சுகம் தரும் சித்த மருத்துவம்: சோரியாசிஸ் படைகளுக்கு பயனளிக்குமா சோற்றுக்கற்றாழை..?



வாதம், பித்தம், கபம்தான் நோய்களுக்கு முக்கிய காரணம் என்கிறது சித்த மருத்துவம். இது உடல் உறுப்புகளுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு உடல் செல்லுக்கும் பொருந்தும். அந்த வகையில் தோல் என்பது நம் உடலில் பரந்து விரிந்த மிகப்பெரிய உறுப்பு. அதில் வாத, பித்த, கப ஏற்றத்தாழ்வுகள் வரவொட்டாமல் தடுக்க உதவுவது தான் 'எண்ணெய்க் குளியல்' என்கிறது சித்த மருத்துவம்.

அது ஒருபுறமிருக்க, காலம் முழுதும் நீங்காமல் உடல் வேதனையை விட, அதிக மன வேதனையை தந்து பலரை வருந்தச் செய்யும் தோல் நோய்தான் சோரியாசிஸ். வறண்ட தோலும், உறுத்தலும் மட்டுமின்றி படைகள் தோறும் செதில் செதிலாக உதிரும் தன்மை கொண்டு, பாதிக்கப் பட்டவர்களை உடலளவிலும், மனதளவிலும் பாதிக்கும் சரும நோய் இது.

கன்ம வியாதிகள் என்று அகத்திய மாமுனிவரால் கருதப்பட்ட சோரியாசிஸ் போன்ற தோல் வியாதிகள் தீரும் வாய்ப்பில்லை என்றும், பருவநிலை மாறுபாட்டிற்கும், உணவு முறைக்கும், மன உளைச்சலுக்கும் தகுந்தாற்போல் அவை உடலில் மறைந்திருந்து, அவ்வப்போது தோலில் வெளிவந்து துன்புறுத்தும் என்றும் சித்த மருத்துவம் கூறுகின்றது.

சித்த மருத்துவத்தில் குட்ட நோய் என்ற பெயரில் பல்வேறு தோல்நோய் களை பற்றி குறிப்பிட்டு மூலிகைகளும், மருத்துவமும் கூறப்பட்டுள்ளன. அதில் வறட்சியான நிலப்பகுதியில் வளர்ந்து, நீர்ப்பசையை தாங்கி, உடலில் வறண்ட தோல் வியாதிகளையெல்லாம் போக்கும் தன்மையுடைய ஒரு மூலிகை 'சோற்றுக்கற்றாழை'.

கசப்பு தன்மையும், குளிர்ச்சி வீரியமும் உள்ள கற்றாழை வாத, பித்த குற்றங்களை தோலில் மட்டுமில்லாது உடலிலும் தன்னிலைப்படுத்தும் தன்மை உடையது. 'குமரி தைலம்' என்ற சித்த மருந்தினை இவ்விரு குற்றங்களை சமப்படுத்த எண்ணெய் குளியலுக்கு பயன்படுத்தலாம்.

கிரீஸ், எகிப்து, மெக்சிகோ, ஜப்பான், சீனா போன்ற பல்வேறு நாடுகளின் பண்டைய கலாசாரங்களில் கற்றாழை மருத்துவ குணங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. எகிப்து நாட்டு ராணிகள், பேரழகுக்காக வர்ணிக்கப்படும் கிளியோபாட்ரா ஆகியோர் கூட தங்கள் சருமத்தைப் பராமரிக்க கற்றாழையை பசையாக்கி பயன்படுத்தினர் என்கிறது வரலாறு.

கிரேக்கத்தின் வரலாற்று வீரர் அலெக்சாண்டர் 'தி கிரேட்', தனது வீரர்களின் காயங்களுக்கு சிகிச்சையளிக்க இதைப் பயன்படுத்தினார் என்கிறது மற்றொரு வரலாற்றுக் குறிப்பு.

1800களில் அமெரிக்காவில், மலச்சிக்கல் பிரச்னைகளுக்கு சிகிச்சையளிக்க கற்றாழை பயன்படுத்தப்பட்டது. ஆனால், அதற்கு முன்னரே 'குமரி எண்ணெய்' என்ற மருந்தினை மலச்சிக்கலுக்கும், மூல வியாதிக்கும் சித்த மருத்துவம் பரிந்துரை செய்துள்ளது என்பது, உலகிற்கே நம் மருத்துவம் தான் முன்னோடி என்று விளங்க வைக்கிறது.

சோற்றுக்கற்றாழையில் உள்ள மடலை நீக்கினால் உள்ளே உள்ள பசை போன்ற பகுதியானது நீர், அமினோ அமிலங்கள், விற்றமின்கள், லிப்பிடுகள், ஸ்டீரால்கள், டானின்கள் மற்றும் என்சைம்கள், பீனாலிக் கலவைகள், சபோனின், ஆந்த்ராகுயினோன்களையும் கொண்டுள்ளது. இதில் உள்ள சி-கிளைகோசைடுகள் மற்றும் அலோ-எமோடின், அலோசின், போன்ற ஆந்த்ராகுயினோன்கள் இதன் மருத்துவ குணத்திற்குக் காரணமாக உள்ளன. இதில் விற்றமின் ஏ, சி மற்றும் ஈ போன்ற ஆன்டி ஆக்ஸிடன்ட்கள், மேலும், விற்றமின்-பி12, ஃபோலிக் அமிலம், கோலின் போன்றவையும் உள்ளன.

கற்றாழையில் உள்ள வேதி மூலக்கூறுகளால் காயங்களை ஆற்றும் தன்மையும், பூஞ்சை, வைரஸ் மற்றும் பாக்டீரியாக்களை எதிர்ப்பதாகவும், மலமிளக்கியாக, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதாகவும், உடலில் கட்டிகளை கரைப்பதாகவும், புற்றுநோயை வரவிடாமல் தடுப்ப தாகவும், ஆன்டிஆக்ஸிடன்ட் தன்மை யும், ஒவ்வாமைக்கு எதிராக செயல் படும் தன்மையும், செரிமானத்தை தூண்டுவதாகவும், வயிற்றுப் புண்ணை ஆற்றுவதாகவும் உள்ளது. மேலும், கொலஸ்ட்ரால், ட்ரைகிளிசரைடுகளைக் குறைத்து சிறுநீரகக் கல்லைத் தடுக்கவல்லது. அத்தகைய சிறப்பு மிக்க கற்றாழையை மடல் நீக்கி, சளி போன்ற பிசினை 7 முறை அலசிய பின் பயன்படுத்த வேண்டுமென சித்த மருத்துவம் அறிவுறுத்துகின்றது.

கற்றாழையில் உள்ள மியூகோபாலி சாக்கரைடுகள் தோலில் ஈரப்பதத்தை உறிஞ்சி சோரியாசிஸ் நோயில் தோல் வறட்சி வராமல் தடுக்கக்கூடியது. அதில் உள்ள சாலிசிலிக் அமிலம் என்ற வேதிப்பொருள் சோரியாசிஸ் நோயில் தோல் அழற்சிக்கு காரணமாகும் ப்ரோஸ்டாகிளாண்டின் ஈ-2 உற்பத்தியை தடுத்து அழற்சியை நீக்கி பளப்பான சருமத்தை ஏற்படுத்த உதவுகிறது.

இன்று சோற்றுக்கற்றாழை இல்லாத சோப் கட்டிகளோ, முகப்பூச்சுகளோ இல்லை என்றே ஆணித்தரமாக சொல்லலாம். ஆக, இன்றைய நவீன அறிவியல் உலகம் அணுக நினைக்கும் பலவற்றையும், பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே அணுகி அவர்களுக்கு முன்னோடியாக திகழ்ந்து வருவது நம் சித்த மருத்துவம். அதனை முறையோடு பயன்படுத்தி வாழ்ந்தால், நலம் தேடும் உலக மக்களுக்கு நாம் முன்னோடியாகத் திகழ முடியும்.

# இன்றைய நாளில்...

★ 1788 – ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது அரசுத்தலைவர் தேர்தலுக்கான திகதி பிலடெல்பியாவில் இடம்பெற்ற மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. அமெரிக்காவின் தற்காலிக தலைநகராக நியூயோர்க் நகரம் அறிவிக்கப்பட்டது.

★ 1898 – அனிபால் குட்வின் செலுலயிட் புகைப்படச் சுருளைக் கண்டுபிடித்தார்.

★ 1948 – ஹைதராபாத்தில் நுழைந்து அதனை இந்திய ஒன்றியத்தில் இணைக்க நடவடிக்கை எடுக்க இந்தியத் துணைப் பிரதமர் வல்லபாய் பட்டேல் இராணுவத்துக்கு உத்தரவிட்டார்.

★ 1949 – இலங்கை, இத்தாலி பின்லாந்து, ஐஸ்லாந்து, ஜோர்தான் ஆகிய நாடுகள் ஐ.நாவில் அங்கத்துவம் பெற சோவியத் ஒன்றியம் தடை செய்தது.

★ 1956 – ஐ.பி.எம். முதல் தடவையாக வட்டு சேமிப்பை அறிமுகப் படுத்தியது.

★ 1971 – மா சே துங்கின் இரண்டாவது தளபதி லின் பியாவோ இராணுவப் புரட்சி தோல்வியடைந்ததை அடுத்து சீனாவை விட்டு வெளியேறினார். இவர் சென்ற விமானம் மங்கோலியாவில் வீழ்ந்து நொறுங்கியதில் அதில் பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர்.

★ 1995 – கொழும்பு இரத்மலானையில் இருந்து பலாலிக்கு இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற அன்டனோவ் ஏஎன்-32 வானூர்தி ஜா-எல அருகே கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்த அனைத்து 81 பேரும் உயிரிழந்தனர்.

★ 2007 – பழங்குடிகளின் உரிமைகள் குறித்த தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★2008 – டில்லியில் தொடர் குண்டுவெடிப்புகள் இடம்பெற்றதில் 30 பேர் கொல்லப்பட்டனர். 130 பேர் காயமடைந்தனர்.

## நக்கல் நமசிவாயம்

**ஏஷியன் கப் நெட்போலும், கிரிக்கெட்டும் ரணிலாலதான் வெல்ல முடிஞ்சதெண்டு சொல்லிக்கொண்டு யாரும் வெளிக்கிட்டிருப்பினமே..?**



# விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்க உறுப்பினரே முட்டுக்கட்டை

## தீர்வு காண முடியாவிட்டால் பெயரை வெளியிடுவதாக அமைச்சர் அமரவீர தெரிவிப்பு




(அநுராதபுரம் செய்தியாளர்)

விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முக்கியமான நபர் ஒருவரே முட்டுக்கட்டையாக இருப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாயம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் ஓரிரு தினங்களில் அவர் யார் என்பதை வெளிப்படுத்துவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடும் நோக்கில் அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முக்கிய தேவை இருக்கின்றது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முக்கியமான நபரொருவருடைய முட்டுக்கட்டை காரணமாகவே விவசாயிகளின் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பதில் தாமதம் ஏற்படுகின்றது.

இன்னும் ஓரிரு தினங்களில் விவசாயம் சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் அந்த நபருடைய பெயரை நான் வெளிப்படுத்துவேன்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் விவசாயத்துறையை முன்னேற்றுவதற்கு ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார். விவசாயிகளுக்குத் தேவையான சகல இரசாயனப் பசளைகளையும் தங்கு தடையின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

# புதிய துறைகளில் முதலீடு செய்ய துருக்கிக்கு வாய்ப்பு

## தூதுவர் ரகிபேயுடனான சந்திப்பின்போது பிரதமர் தெரிவிப்பு




இலங்கையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தளர்த்தப்பட்ட விசா விதிமுறைகள் மற்றும் முதலீட்டுச் சபையின் முதலீட்டு வசதித் திட்டங்கள், முதலீடுகளை மேலும் மேற்கொள்ளும் செயற்பாடுகளில் துருக்கிய முதலீட்டாளர்களை ஈர்க்க உதவும் - என பிரதமர் தினேஷ் குணவர்தன உறுதியளித்துள்ளார்.

துருக்கியின் தூதுவர் ரகிபே டிமெட் (Rakibe Demet) அண்மையில் பிரதமரை சந்தித்திருந்தார். நீண்டகால குடியிருப்பு விசாவைப் பெறுவதில் துருக்கிய வர்த்தகர்கள் சிலர் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக இடம்பெற்ற இந்த சந்திப்பின்போதே பிரதமர் தினேஷ் குணவர்தன இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த புதிய நடைமுறை முதலீட்டு ஊக்குவிப்பு யோசனை மூலம் முதலீட்டாளர்களை அதிகளவில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான வாய்ப்பு கிட்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாய இயந்திரங்கள், மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் மீன்வளத் துறைகள் போன்ற புதிய துறைகளில் முதலீடு செய்ய துருக்கிக்கு இப்போது வாய்ப்புகள் இருப்பதாக பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

மருந்து மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களை தமது நாடு ஏற்கனவே இலங்கைக்கு வழங்கியுள்ளதாகவும் மேலும் இரண்டு மருத்துவ உதவிப்பொருட்கள் அடுத்த வாரம் இலங்கைக்கு கொண்டுவரப்படவிருப்பதாகவும் துருக்கிய தூதுவர் இதன்போது தெரிவித்தார்.

## கட்டுத்துவக்கில் அகப்பட்டு நபரொருவர் உயிரிழப்பு

(அநுராதபுரம் செய்தியாளர்)

கட்டுத்துவக்கில் அகப்பட்டு உயிரிழந்திருந்த குடும்பஸ்தர் ஒருவருடைய சடலத்தினை எட்டவீரவெவ காட்டுப்பகுதியிலிருந்து மரதன்கடவல பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் (11) சடலம் மீட்கப்பட்டுள்ளது.

52 வயதுடைய எட்டவீரவெவ, மரதன் கடவல பகுதியைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் தனது சேனைக்கு செல்வதாக வீட்டில் கூறிவிட்டு சென்றுள்ள நிலையில், மீண்டும் அவர் வீடு திரும்பாததை அடுத்து உறவினர்களும் ஊர் மக்களும் நடத்திய தேடுதலின்போதே கட்டுத்துவக்கில் அகப்பட்டு உயிரிழந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கட்டுத்துவக்கை கட்டியதாக சந்தேகிக்கப்படும் கெக்கிராவ, ஒழுகறந்த பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட நபர் ஒருவரை சந்தேகத்தின்பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மரதன்கடவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்ல இரண்டு இலட்சம் பேர் பணியகத்தில் பதிவு

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தகவல்

நடப்பாண்டில் ஜூலை மாதத்துடன் கடந்த ஒகஸ்ட் மாதத்தை ஒப்பிடுகையில், வெளிநாடு செல்லும் தொழிலாளர்களினால் ஈட்டப்படும் அந்நியசெலாவணி நூற்றுக்கு 16.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும், இந்த வருடத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வெளியேறுவதற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவாகியுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சமாக அதிகரித்துள்ளதாகவும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அனுப்பும் நிதித்தொகை கடந்த ஜூலை மாதத்தில் 279 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது. ஆனால், அந்தத் தொகை 325 மில்லியன் அமெரிக்க டொலர். அதாவது, 46 மில்லியன் டொலர் வரையில் அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சட்ட ரீதிதான வங்கி முறையினூடாக இவ்வாறு பணம் அனுப்பியுள்ள சகல வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியாளர்களுக்கும் தமது நன்றியை தெரிவித்துக்கொள்வதாகவும், இந்த சந்தர்ப்பத்தில் சகல இலங்கையர்களுக்கும் வெளிநாடு சென்ற தொழிலாளர்களின் உதவி மிகவும் அத்தியாவசிய மென்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது,

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக வெளியேறிச் செல்ல வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவானவர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தையும் கடந்துள்ளது.

இந்த வருடத்தில் மூன்று இலட்சம் தொழிலாளர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வெளியேற்றுவதே எமது பிரதான நோக்கமாகும். அந்த இலக்கை மூன்று இலட்சத்து 30 ஆயிரம் வரையில் அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.




சாயி பஜனை ஆங்கில நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை கொழும்பு புதுச்செட்டித்தெரு சாயி நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இந்திய விவேகானந்த கலாசார நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ரெவன்ட் விக்ரமசிங் கலந்துகொண்டார். நூலின் முதற்பிரதியை சாயி மந்திர் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகனிடமிருந்து கலாநிதி ரெவன்ட் விக்ரமசிங் பெற்றுக்கொண்டார். நூலின் தொகுப்பாசிரியர் திருமதி சர்வகுணதேவி சண்முகநாதன், சாயி நிலைய உப தலைவர் சிவா இராஜஜோதி ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய கடமைகளை பொறுப்பேற்பு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய அண்மையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அதிகாரிகளுக்கு மத்தியில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் பாலசூரிய, நாட்டில் நிலவும் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் இலங்கையின் பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்யும் வகையில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பணியை வினைத்திறனுடன் தொடர்வதற்காக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரிக்கு ஆதரவளிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்தார்.



2015இல் முதன்முதலில் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இராஜாங்க அமைச்சர் பாலசூரிய, 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதிய அரசாங்கம் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, சமூகப் பாதுகாப்புக்கான இராஜாங்க அமைச்சுப் பதவியை வகித்தார். முன்னதாக, அவர் சப்ரகமுவ மாகாண சபையின் உறுப்பினராக 2012ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, அமெரிக்காவின் விஸ்கொன்சின் பல்கலைக்கழகத்தில் கணிதம் மற்றும் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் பெற்றதோடு, இங்கிலாந்தின் கார்டிஃப் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார். அவர் தனது ஆரம்பக் கல்வியை கொழும்பு சர்வதேச பாடசாலையில் பயின்றார்.

## கேரள கஞ்சாவை கடத்திய இருவருக்கு விளக்கமறியல்

(அநுராதபுரம் செய்தியாளர்)

கேரள கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரை எதிர்வரும 23ஆம் திகதிவரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் இருவரும் விளச்சிய மற்றும் பேமடுவ பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

விளச்சி பகுதியிலிருந்து அநுராதபுரம் பகுதிக்கு கேரள கஞ்சாவை இருவர் கடத்திச் செல்வதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய கடந்த 09ஆம் திகதி அநுராதபுரம் விளச்சிய வீதியில் அநுராதபுரம் வலய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுருந்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்த ஒரு கிலோ 600 கிராம் நிறையுடைய கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

# அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து தவறி விழுந்த நபர் உயிரிழப்பு

வெல்லம்பிட்டிய, லக்சந்த செவன அடுக்குமாடி குடியிருப்பின் 8ஆவது மாடியிலிருந்து தவறி விழுந்த நபரொருவர் உயிரிழந்துள்ளதாக வெல்லம்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (11) இடம்பெற்றுள்ளது.

லக்சந்த செவன அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 61 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



பஸ்யால எல்லலமுல்ல ஸாஹிரா முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபரும் நூலாசிரியையுமான 'கவியரசி' எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமாவின் 'சரியான வெற்றி' எனும் சிறுவர் கதை நூலில் முதல் பிரதியை புரவலர் ஹாசிம் உமருக்கு அவரது இல்லத்தில் வைத்து வழங்கினார். இந்நிகழ்வில், கொழும்பு பல்கலைக்கழகத்தின் செயலாளர் மர்ஷாட் பாரி மற்றும் நூலாசிரியையின் கணவர் எம்.ஏ.எம்.றிப்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (படம்.எம்.நசார்)

# மந்துவில் பகுதியில் கைக்குண்டு மீட்பு



(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மந்துவில் கிழக்கு பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றிலிருந்து நேற்று முன்தினம் (11) வெடிக்காத நிலையில் கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

காணி துப்புரவு பணியின்போது குறித்த கைக்குண்டு அவதானிக்கப்பட்ட நிலையில், கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டு கைக்குண்டை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 12.09.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 131 846 | 143 4555 |
| கனேடியன் டொலர் | 162 788 | 174 55 2 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 70 0 | 42 821 |
| யூரோ | 248 026 | 263 4657 |
| ஜப்பான் யென் | 1 3843 | 1 4888 |
| சிங்கப்பூர் டொலர் | 143 3838 | 154 3456 |
| ஸ்ரேலிங் பவுன் | 303 3157 | 32 8652 |
| சுவிஸ் பிராங் | 260 030 | 277 04 1 |
| ஐ.அ.டொலர் | 247 67 6 | 258 5040 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 85 6 34 |
| குவைட் | குவைட் தினார் | 0,063 6043 |
| ஓமான் | ஓமான் றியால் | 83 656 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 4333 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 2828 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 5 77 |

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி நாடு தழுவிய ஊர்திவழி கையெழுத்துப் போராட்டம் நேற்றும் முன்னெடுப்பு



(யாழ். நிருபர்)

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை நீக்கக் கோரி நாடு தழுவிய ஊர்தி வழி கையெழுத்துப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாக தொடர்ந்தது.

நேற்று முன்தினம் மாவட்டபுரம் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று வல்லை வெளி முனீஸ்வரர் ஆலயம் முன்பாக தேங்காய் உடைத்து ஆரம்பிக்கப்பட்டது

இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியும், சர்வஜன நீதி அமைப்பும் இணைந்து காங்கேசன்துறை முதல் ஹம்பாந் தோட்டை வரை நடத்தவுள்ளன.

தொடர்ந்து கையெழுத்துப் போராட்ட ஊர்தி நேற்று நெல்லியடி நகரில் கையெழுத்து போராட்டங்களை பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் தலைமையில் இடம்பெறும் குறித்த கையெழுத்துப் போராட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். மக்கள் ஆர்வத்துடன் கையெழுத்திடுவதை அவதானிக்க முடிகிறது. தொடர்ந்து ஊர்தி பருத்தித்துறை மருதங்கேணி ஊடாக பயணித்தது.

# வட்டுக்கோட்டை தோட்டத்தில் பூசணிக்காய் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியில் 40 கிலோ பூசணிக்காயை திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள தோட்டமொன்றில் 40 கிலோ பூசணிக்காய் களவாடப்பட்டிருந்தது.

அது தொடர்பில் தோட்டக்காரரால் வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தவேளை, வட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள மூளாய் பகுதியில் நபர் ஒருவர் 40 கிலோ பூசணிக்காயை கிலோ 70 ரூபா வீதம் விற்பனை செய்ததாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பூசணிக்காயை விற்ற நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பங்கையற்செல்வனின் 'உயிர்மை' ஓவியக் கண்காட்சியும் நூல் அறிமுக நிகழ்வும்



(சாவகச்சேரி நிருபர்)

அதிபர் அ.பங்கையற்செல்வனின் "உயிர்மை" ஒளி ஓவியக் கண்காட்சியும், 'நிழல்கள் சொல்லும் கதைகள்' நூல் அறிமுக நிகழ்வும் கடந்த சனிக்கிழமை (10) காலை சாவகச்சேரியில் அமைந்துள்ள ரி.பி.ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூடத்தில் இடம்பெற்றிருந்தது. ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூடத்தின் ஸ்தாபகர் திருமதி யோகமணி அழகரத்தினம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி அபிராமி, கோப்பாய் கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் து.இளங்கோ, அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரியரத்ன, சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம், யா/போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் மற்றும் எழுத்தாளர் கருணாகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில் நிழல்கள் சொல்லும் கதைகள் நூல் அறிமுக உரையை காவேரி கலாமன்ற நிறைவேற்று இயக்குநர் கலாநிதி வண ரி.எஸ் ஜோசுவா ஆற்றி நூலை அறிமுகம்செய்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா மரக்காரம்பளையில் தும்புத் தொழிற்சாலை திறந்துவைப்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா, மரக்காரம்பளை பகுதியில் தும்புத் தொழிற்சாலை திறந்துவைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (11) காலை 10.00 மணியளவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்தார்.

தொழிற்சாலையின் பெயர்ப்பலகையை பிரதம விருந்தினர் திரைநீக்கம் செய்து வைத்ததுடன், தொழிற்சாலையும் நாடா வெட்டி திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா நகரசபை உபதலைவர் சு.குமாரசாமி, கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழிலதிபர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# மாதகலில் மரம் வெட்ட முற்பட்டவர் தவறி விழுந்து உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மாதகல் பகுதியில் மரத்தின் கிளைகளை வெட்ட ஏறியவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

மாதகல் பகுதியைச் சேர்ந்த பாக்கியநாதன் ஜோசப் இமானுவேல் (வயது 66) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கடந்த வியாழக்கிழமை (08) மரத்தில் ஏறி கிளைகளை வெட்ட முற்பட்ட வேளையில் மரத்திலிருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



வத்துகாமம், ஸ்ரீ விநாயகர் கோவிலில் இடம்பெற்ற வருடாந்த உற்சவத்தின்போது இடம்பெற்ற பூஜைகள் மற்றும் பாற்குடப் பவனியின்போது எடுக்கப்பட்ட படங்கள்.... (கண்டி நிருபர்)

# ஹட்டன் - நுவரெலியா வீதியருகே ஆணொருவரின் சடலம் மீட்பு



ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை மேபீல்ட் சந்தியில் வீதியோரத்தில் இருந்து மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் பொலி ஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் மொரஹல, பலாங் கொடை, மெதகமமெத்த பகுதியைச் சேர்ந்த நதீர சம்பத் (வயது 27) என அடையாளம் காணப்பட் டுள்ளதுடன், குறித்த நபர் தலவாக்கலை பிரதேசத்தி லுள்ள மீன் கடையொன்றில் பணிபுரிபவர் என திம் புள்ள - பத்தனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சடலமாக மீட்கப்பட்டவரின் உடலில் வெளிப்புறக் காயங்கள் காணப்படுவதாகவும், அருகிலிருந்த கடை ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சீசீரிவி கெமராவில் சடலமாக மீட்கப்பட்டவர் விபத்தில் சிக்கும் காட்சி பதிவாகியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த விபத்தை ஏற்படுத்தியவர்கள் தொடர்பில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ளனர்.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தடயவியல் பிரிவு பொலிஸாருடன் இணைந்து திம்புள்ள - பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மஸ்கெலியாவில் இலவச பற்சிகிச்சை முகாம்


(மஸ்கெலியா நிருபர்)

இலங்கை பல் மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட ஆர்.பி.கே. பிலான்டேசனுக்கு உரித்தான புரவுன் சீக் தோட்டம் - 7 பிரிவில் இலவச பல் சிகிச்சை முகா மொன்று முன்னெடுக்கபட்டது.

இலங்கை பல் மருத்துவ சங்கம், இலங்கை லிவர் பிரதர்ஸ் மற்றும் கொழுப்பு லயன்ஸ் கிளப் ஆகிய இணைந்து இந்த இலவச பல் சிகிச்சை முகாமை முன்னெடுத்திருந்தன.

மஸ்கெலியா புரவுன்சீக் தோட்டம் -7 பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட நோயாளர் களுக்கு சனிக்கிழமை (10) காலைமுதல் மாலை 4 மணிவரை சிகிச்சையளிக்கப்பட்டது. 200 பேர் இந்த சிகிச்சை முகாமில் கலந்துகொண்டு சிகிச்சைபெற்று கொண்டனர். சிகிச்சை பெற்றுக் கொள்ள வந்தவர்களுக்கு உணவுப் பொதிகள் மற்றும் பற்பசைகள் மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இதன்போது பற்களை சுத்தம் செய்தல் மற்றும் பாதுகாத்தல் குறித்து மக்களுக்கு விழிப் புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.



156ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு நுவரெலியா பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா சீதாஎலிய கோவிலிலிருந்து நுவரெலியா பிரதான நகரம் வரும் வீதி ஓரங்களில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. (செ.திவாகரன்)

# நல்லதண்ணியில் உலவும் நல்லபாம்பு

(மஸ்கெலியா நிருபர்)

நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்சபான தோட்ட எமில்டன் பிரிவில் உலவும் சுமார் 8 அடி நீளம் உள்ள சர்ப்பத்தால் (நல்ல பாம்பு) அப்பகுதி மக்கள் அச்சத்திலுள்ளனர்.

தோட்ட மக்கள் அட்டை கடியுடன்விஷ ஜந்துக்கள் கடியில் சிக்கித் தவிக்கும் நிலையிலுள் ளனர். தற்போது பெரிய - பயங்கர பாம்பு உலவி வருவதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இதுகுறித்து தோட்ட நிர்வாகம் உடனடியாக குறித்த சர்ப்பத்தை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# கட்டுகஸ்தோட்டையில் 14 மணிநேர நீர்வெட்டு

(பீ. எம். முக்தார்)

கண்டி மாவட்டத்துக்குட்பட்ட கட்டுகஸ் தோட்டையில் அமைந்துள்ள பாரிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் திருத்த வேலைகள் காரணமாக இன்று 13ஆம் திகதி காலை 06 மணிமுதல் மாலை 8 மணி வரையிலான 14 மணிநேர நீர் விநியோகத் தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகுமென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

ஹரிஸ்பத்துவ, அக்குறணை, பூஜாப்பிட்டிய, பாத்ததும்பர, கண்டி மாநகர சபைக்குட்பட்ட பிரதேசம், அம்பிட்டிய மற்றும் ஹந்தான ஆகிய பகுதிகள் நீர் விநியோத் தடையினால் பாதிக்கப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடி காலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்துவைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# இரத்தினபுரியில் 7 வயதுச் சிறுமியின் உருக்குலைந்த சடலம் மீட்பு

## தாயின் காதலன் மற்றும் அவரது மனைவி தலைமறைவு



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி தெல்வலை பிரதேசத்தில் கொலை செய்யப்பட்டு உரையிலிட்டு புதைக்கப்பட்டிருந்த 7 வயதுச் சிறுமியின் உருக்குலைந்த சடலம் நேற்றுமுன்தினம் கைவிடப்பட்ட இரத்தினக்கல் குழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி நீதவான் காஞ்சனா கொடிதுவக்கு, இரத்தினபுரி நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரி முதித குடாகம ஆகியோர் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது.

கொலை தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறுமியின் தாய், சிறுமி புதைக்கக்கப்பட்ட இடம் மற்றும் உயிரிழந்த சிறுமி போடப்பட்டிருந்த உறை, உருக்குலைந்த சடலம், சிறுமியின் ஆடைகள், மூன்று கருங்கற்கள் ஆகியவற்றை அடையாளம் காட்டினார்.

மேலதிக விசாரணைகளுக்காக சிறுமியின் சடலம் இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், சடலத்தை டிஎன்ஏ பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் நீதவான் பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை, தனது சட்டரீதியான மனைவியுடன் தலைமறைவாயுள்ள சந்தேக நபரின் வீட்டுக்கு இனந்தெரியாதோர் தீ வைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனது மனைவி உட்பட இரண்டு காதலிகளுடன் ஒரே வீட்டில் குடித்தனம் நடத்திவந்த கசிப்பு வியாபாரியான பிரதான சந்தேக நபர், சிறுமியை கொடூரமாக தாக்கியதால் சிறுமி தனது மடியில் உயிரிழந்ததாகவும், அதன்பின்னர் சிறுமியின் சடலத்தை உறையிலிட்டு, குழியில் போட்டு மூடினார் எனவும் இதற்கு சந்தேகநபரின் மனைவியும் தானும் அவரின் கர்ப்பிணியான காதலியும் உதவியாக இருந்ததாகவும் சிறுமியின் தாய் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

## துளிச் செய்திகள்

★ நீர்கொழும்பு, கொச்சிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலுவகொட்டுவ பகுதியில் வாகன விற்பனை நிலையத்தின் காவலாளியொருவர் நேற்றுமுன்தினம் காலை கொலைசெய்யப்பட்டுள்ளார். பொருட்களை திருடுவதற்காக வந்தவர்கள் காவலாளியின் கை, கால்களைக் கட்டிப்போட்டு கொலைசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மாரவிலவைச் சேர்ந்த 66 வயதான நபர் ஒருவரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

★ தெமட்டகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள தொடர்மாடிக் குடியிருப்பில் பொலிஸார் நேற்றுமுன்தினம் நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போது 35 கிராம் ஹெரோயின், 100 போதை மாத்திரைகள், 05 வாள்களுடன் எண்மர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்ணொருவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர். மாளிகாவத்தை, இராஜகிரிய பகுதிகளைச் சேர்ந்த 19 முதல் 44 வயதுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

★ கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை பகுதியில் 11 கிராம் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த 37 வயதான நபர் ஒருவர் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★ ஹொரணை நகரசபைத் தலைவரின் வீட்டுக்கு கடந்த மே 09ஆம் திகதி சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் 44 வயதான சந்தேக நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★ குருநாகல் பிரதேச சபைத் தலைவரின் வீட்டுக்கு கடந்த மே 09ஆம் திகதி சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் 37 வயதான தொரட்டியாவ பகுதியைச் சேர்ந்த ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★ ஹபரண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மின்னேரிய - பொலனறுவை பிரதான வீதியில் சைக்கிள் ஒன்றின் மீது காரொன்று மோதி நேற்றுமுன்தினம் விபத்து ஏற்பட்டுள்ளது. இதன்போது சைக்கிளில் பயணித்த 44 வயதான நபர் உயிரிழந்துள்ளார்.

★ அரலகங்வில, தமிந்த சந்தியில் காட்டு யானை தாக்கியதில் நேற்றுமுன்தினம் ஒருவர் உயிரிழந்துள்ளார். பிம்புரத்தேவ பகுதியைச் சேர்ந்த 65 வயதான நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சட்டவிரோதமாக மரம் ஏற்றிச்சென்றவர் கைது



(மனூர சுதத் செல்லஹேவா)

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் மரங்களை ஏற்றிச்சென்ற லொறியொன்றின் சாரதி உட்பட இருவரை ஹற்றனில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன், செனன் பகுதியில் லொறியொன்றை நேற்றுமுன்தினம் சோதனையிட்டபோது அனுமதிப்பத்திரமின்றி மரங்களை ஏற்றிச் சென்றமை தெரியவந்துள்ளது. இது தொடர்பில் சந்தேக நபரான லொறியின் சாரதியும் உதவியாளரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் ஹற்றன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# நாட்டில் மீன் உற்பத்தியில் வீழ்ச்சி; மேலும் விலை அதிகரிக்கும் அபாயம்!

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக கடல் மீன் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. அதன்பிரகாரம் இவ்வாண்டில் பெப்ரவரி முதல் ஜூன் வரையான ஐந்த மாத காலப்பகுதியில் மீன் உற்பத்தி 16.7 மில்லியன் கிலோ கிராம் வீழ்ச்சியடைந்துள்ளது.

2021ஆம் ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்த வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மத்திய வங்கியின் புள்ளிவிபரங்கள் தெரிவித்தன. அந்த வருடம் பெப்ரவரி முதல் ஜூன் வரையான காலப்பகுதியில் 176.7 மில்லியன் கிலோ கிராம் மீன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. எனினும், இவ்வாண்டு அதே காலப்பகுதியில் 160 மில்லியன் கிலோ கிராம் மாத்திரமே உற்பத்திசெய்யப்பட்டுள்ளது.

எனினும், இவ்வாண்டு ஜனவரி மாதம் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவித்தன. குறிப்பாக, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.7 மில்லியன் கிலோ கிராம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையிலுள்ள விலங்குகளுக்கு புரோட்டீன் தயாரிப்பதற்கு மீன்கள் அவசியப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மீன் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக மீன்களின் விலை மேலும் அதிகரிக்கக்கூடும் என மீனவர்கள் தெரிவித்துள்ளனர். தமக்கு வழங்கப்படும் எரிபொருள் அளவு போதாமை காரணமாக தொடர்ச்சியாக தொழிலில் ஈடுபட முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



## கெப்பெட்டிபொலவில் வேன் விபத்து: ஒருவர் உயிரிழப்பு; அறுவருக்கு காயம்



கெப்பெட்டிபொல, பெலுன்கல பிரதேசத்தில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்ற வேன் விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் அறுவர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக கெப்பெட்டிபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் வேனில் பயணித்த ஏழு பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சைக்காக வெலிமடை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். குருநாகல், ரிதிகம பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ரிதிகம பிரதேசத்தைச் சேர்ந்த சிலரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளனர். வெலிமடை, போகஹகும்புர பிரதேசத்தில் உறவினரொருவரின் வீட்டுக்கு சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வேனின் சாரதிக்கு நித்திரை ஏற்பட்டதால் இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கெப்பெட்டிபொல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## திருமணம் செய்வதாக ஆசிரியை ஒருவரை ஏமாற்றி பெருந்தொகைப் பணம் கொள்ளை

### ரூ. 28 இலட்சத்தைப் பெற்றுக்கொண்ட நபருக்கு விளக்கமறியல்

(கெலும் குணதிலக்க)

பிபில பகுதியில் திருமணம் செய்துகொள்வதாக ஆசிரியை ஒருவரை ஏமாற்றி 28 இலட்சத்து 76 ஆயிரத்து 669 ரூபாவைப் பெற்றுக்கொண்ட நபர் ஒருவரை நாளை மறுதினம் (15) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பண்டாரவளை காப்புறுதி நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் 35 வயதான நபர் ஒருவரையே பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இவர் இரு பிள்ளைகளின் தந்தையென்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினர்.

இந்த நபர் பிபில பகுதியிலுள்ள ஆசிரியை ஒருவரை காதலித்து வந்துள்ளார். அந்த ஆசிரியையிடமிருந்து அவ்வப்போது பணம் பெற்றுக்கொண்டுள்ளதுடன் அதனைக்கொண்டு புதிய கார் ஒன்றையும் கொள்வனவு செய்துள்ளார்.

இது தொடர்பில் மொனராகலை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு பாதிக்கப்பட்ட ஆசிரியை முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளார். அதனை அடிப்படையாகக்கொண்டு விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேக நபரை கைதுசெய்ததுடன் புதிய காரையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில், சந்தேக நபரை பிபில நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் மகேஷானி அமுனுகம உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மொனராகலை குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதான வில்பிரட் சில்வா தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## நீர்வளப் பாதுகாப்பு தொடர்பான செயலமர்வு அம்பலாங்கொடையில்







(பீ.எம்.முக்தார்)

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நீர்வளப் பாதுகாப்பு, மழைநீர் சேமிப்பு, நீர் மாசடைவதைத் தவிர்த்தல் தொடர்பாக நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்கள், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களிடையே விழிப்புணர்வு செயலமர்வுகளை நடத்தி வருகிறது.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைமை அலுவலக மக்கள் தொடர்பாடல் பிரிவின் ஏற்பாட்டிலான மற்றுமொரு செயலமர்வு அண்மையில் அம்பலாங்கொடை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட இச்செயலமர்வில் பிரதேச செயலாளர் எம்.ஜி.எச்.நிரோஷனி, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சிரேஷ்ட மக்கள் தொடர்பாடல் அதிகாரி ஹேமந்த அபயகோன், சிரேஷ்ட சமூகவியலாளர் சுபாஷினி சொய்ஸா ஆகியோர் இங்கு உரை நிகழ்த்தினர். நீர் மாசடைதல், நீர் சுத்திகரிப்பு முறைகள், நீர்க் கட்டணம் அறவிடப்படும் முறை, மழைநீர் சேமிப்பு தொடர்பாக இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

அம்பலாங்கொடை பிரதேச செயலக அதிகாரிகள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள் பலரும் இச்செயலமர்வில் பங்குபற்றினர்.







கொழும்பு கிராண்ட்பாஸ் சுவர்ண பைரவர் சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெற்ற ஸ்ரீ ஐயப்பன் சுவாமி ஆவணி திருவோண தின பூஜைகளின்போது அபிஷேகம், பதினெட்டாம் படி பூஜை, தீப ஆராதனை நடைபெறுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பக்த அடியார்களையும் காணலாம். (படங்கள் எம்.நசார்)

## பாரதி நினைவரங்கில் வலம்புரி கவிதா வட்டத்தின் 79ஆவது கவியரங்கம்



(முஹம்மத் நசார்)

வலம்புரி கவிதா வட்டத்தின் 79ஆவது கவியரங்கம் அண்மையில் கொழும்பு, பழைய நகர மண்டபத்தில் நடைபெற்றது. செப்டம்பர் 11ஆம் திகதி பாரதியின் நினைவு நாள். அதனை முன்னிட்டு பாரதி நினைவரங்காக நடைபெற்ற கவியரங்கு கவிதாயினி எஸ்.யூ.கமர்ஜான் பீபியின் தலைமையில் இடம்பெற்றது.

வகவத் தலைவர் என் நஜ்முல் ஹுசைன் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார். செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வரவேற்புரை நிகழ்த்த, பொருளாளர் ஈழகணேஷ் நன்றியுரை வழங்கினார்.

இறுதியாக மார்ச் மாதம் நடைபெற்ற 78ஆம் கவியரங்கிற்கும் ஆறு மாதத்திற்குப் பிறகு நடந்த 79ஆவது கவியரங்குக்கும் இடைப்பட்ட காலத்தில் நம்மைவிட்டுப் பிரிந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரம், வகவ பொருளாளர் ஈழகணேஷின் மகன் சுரேந்தர் தர்மலிங்கம், மூத்த எழுத்தாளர் தெணியான், வகவ கவிஞர் பெருதோட்ட ரிஸ்மி, வகவ கவிஞர் எம்.ஏ.எம். ஆறுமுகத்தின் மனைவி உதயலட்சுமி ஆறுமுகம், வகவ உறுப்பினர் எஸ்.சிவராசா, சட்டத்தரணி இராஜகுலேந்திரா ஆகியோருக்கான நினைவுப் பிரார்த்தனை இடம்பெற்றது.

வகவ சிரேஷ்ட ஸ்தாபகர் சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ.நாகூர் கனி, சிறிய எலும்பு முறிவுக்கான சிகிச்சையின் பின் வீட்டில் ஓய்வெடுத்து வருவது குறித்தும் அவரை சந்தித்து சுகநலன் விசாரித்த வகவ கவிஞர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தமையையும் குறிப்பிடப்பட்டது. வகவ வளர்ச்சியில் அவரது பங்களிப்பு குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

கலாபூஷணம் விருது பெற்ற கவிஞர்கள் அஸ்ரப் சிஹாப்தீன், இலங்கை பொன்மனச் செம்மல் தாஜ்மஹான், கலைக்கமல், கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், மலாய்கவி டிவாங்ஸோ ஆகியோருக்கு வாழ்த்து கூறப்பட்டது.கவிதாயினி எஸ்.யூ.கமர்ஜான் தலைமையில் இடம்பெற்ற கவியரங்கில் கவிஞர்கள் வாழைத்தோட்டம் எம்.வஸீர், நித்திலன்ராஜா, இளநெஞ்சன் முர்ஷிதீன், லுணுகல கபிலகன் ஒகஸ்டீன், அகீலா சிஃபார், கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், மலாய்கவி டிவாங்ஸோ, கிண்ணியா அமீர் அலி, சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸ், கம்மல்துறை இக்பால், எஸ்.தனபாலன், மாத்தளை கமால், கவிநேசன் நவாஸ், தமிழ்த்தென்றல் அலி அக்பர், இலங்கை பொன்மனச்செம்மல் தாஜ்மஹான், பர்ஹாத் சித்தீக் ஆகியோர் கவிதை பாடினர்.

கவிஞர் ரவூப் ஹஸீர், நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், மஸீதா அன்சார், ஷாமில், பஸ்லி ஹமீத், நூருல் ஷிபா ரஷீத், எம்.ஜனார்தனன், அமல் பாண்டி போன்றோர் சபையை அலங்கரித்தனர்.

## அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் இலங்கை வருகை





அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் மார்ட்டின் சுன்கொங் நேற்று முன்தினம் (11) இலங்கை வந்தடைந்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது விடுத்த அழைப்பிற்கமைய அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகத்தின் இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்த மார்ட்டின் சுன்கொங்கை நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க ஆகியோர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது மார்ட்டின், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாட இருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அத்துடன், மார்ட்டின் சுன்கொங், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அதனையடுத்து, அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம், நாடாளுமன்ற சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரையும் சந்திக்கவிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.


தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

சிறு விளம்பரம்

ஜோதிடம்

உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒரு முறை என்னை தொடர்புகொண்டால் 100% வெற்றி நிச்சயம். நடக்காத காரியங்களையும் நடத்தி வைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன், முன்னேற்றத்தடை, எதிரித்தொல்லை, வழக்கு, கொடுத்த பணம் திரும்பி வர, காதல், கணவன், மனைவி பிரச்சினை, நீண்டகால நட்பின் பிரிவால் வேதனை, நன்றாக பழகி பயனடைந்துவிட்டு விலகிச்சென்றுவிட்டவர், குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சினைகளுக்கும் நிரந்தரத் தீர்வு. நினைத்தது நினைத்தபடி. உடனே என்னை தொடர்புகொள்ளுங்கள். உலகப் புகழ்பெற்ற மலையாள மாந்திரீக ஜாம்பவான் தத்துவஞானி மகரிஷி தேசபந்து கௌரவ கலாநிதி ஸ்ரீமத் சுவாமிஜி 071 0192687 www.facebook.com / Srimath suwamiji



திகதி 11.09.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4875
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,598,510.00
ஆங்கில எழுத்து V வெற்றி இலக்கங்கள் 1 5 8 5 4 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,556,064.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3117
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,316,380.00
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 31 46 61 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,568,024.80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1330
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,500,620.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 3 8 5 0 7 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,599,298.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 905
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,769,540.00
வெற்றி இலக்கினம் E வெற்றி இலக்கங்கள் 12 16 40 54
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 124,996,167.20

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 184
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,417,060.00
இலக்கினம் மகரம் வெற்றி இலக்கங்கள் 06 09 32 47
விசேட இலக்கினம் மகரம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,611,628.60

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் :1223
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 12,253,660.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 269,964,498.00
K 03 04 15 28 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# ஓட்டமாவடி பிரதேசத்தில் டெங்கு பரிசோதனை







(கல்குடா நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துவரும் நிலையில், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணனின் வழிகாட்டலில் பல்வேறு வேலைத்திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவிலுள்ள பகுதிகளில் டெங்கு தாக்கம் பரவாத வகையில் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக்கின் வழிகாட்டலில் வேலைத்திட்டங்கள் நாளாந்தம் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.எல்.நௌபர் தலைமையிலான சுகாதாரப் பரிசோதகர்கள், அலுவலக டெங்கு பிரிவு உத்தியோகத்தர்கள், ஓட்டமாவடி பிரதேச சபை உத்தியோகத்தர்கள் வீடு வீடாகச் சென்று டெங்கு பரவும் இடங்களை நேற்று (12) பரிசோதனை செய்தனர்.

இதன்போது டெங்கு பரவும் வகையில் பொருட்களை வைத்திருந்த வீட்டு உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டதுடன், அப்பொருட்கள் ஓட்டமாவடி பிரதேச சபை உத்தியோகத்தர்களால் அகற்றப்பட்டன.

டெங்கு நோயின் தாக்கத்தை உணர்ந்து பொதுமக்கள் மிகவும் விழிப்புணர்வுடன் செயற்படுவதுடன், வீடுகளில் நீர் தேங்கியிருக்கும் இடங்களை அகற்றி, டெங்கு நுளம்புகள் பெருகுவதைத் தடுத்து, எமது சுற்றுப்புறச் சூழலை சுகாதார முறையில் பேணுமாறு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு மட்டு. சிறையிலிருந்து 29 பேர் விடுதலை



(மட்டக்களப்பு நிருபர்)

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் நேற்று (12) மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து பெண் கைதி ஒருவர் உட்பட 29 கைதிகள் விடுதலைசெய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற கைதிகள் விடுதலை செய்யப்படும் நிகழ்வில் பிரதம சிறைக்காவலர் எம்.மோகன்தாஸ் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

சிறு குற்றம் புரிந்த - தண்டனைப் பணம் செலுத்தாத கைதிகளே நேற்று விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com







காத்தான்குடி நகர சபையும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களமும் இணைந்து காத்தான்குடி ஏத்துக்கால் கடற்கரைப் பகுதியில் ஏற்பட்டுவரும் கடலரிப்பை தடுக்கும் முகமாக அணை ஏற்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. சுமார் நானூறுக்கும் அதிகமான மண் மூடைகளைக்கொண்டு அணை அமைக்கும் பணி துரிதமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் - காத்தான்குடி நிருபர்)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று காதரியா வீதியில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பட்ட இரகசிய தகவலின்படி குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் நபர் ஒருவரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 70 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (11) ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மோட்டார்சைக்கிள் - லொறி மோதிய விபத்தில் திருக்கோவிலில் ஒருவர் பலி

(கனகராசா சரவணன்)

அம்பாறை, திருக்கோவில், பொத்துவில் பிரதான வீதியிலுள்ள நேருபுரத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் லொறி ஒன்று நேற்று முன்தினம் (11) இரவு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டர்சைக்கிளை செலுத்திச்சென்றவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன், லொறியுடன் லொறி சாரதி தப்பியோடியுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

பொத்துவில், ஹிதாயாபுரத்தைச் சேர்ந்த 58 வயதுடைய அப்துல் காதர் முகமது அலாவூதீன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் பொத்துவில் ஹிதாயாபுரத்தில் இருந்து அக்கரைப்பற்றை நோக்கி சம்பவ தினமான நேற்று முன்தினம் இரவு 7.20 மணியளவில் மோட்டர்சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது அக்கரைப்பற்று பகுதியிலிருந்து பொத்துவிலை நோக்கி பயணித்த லொறி நேருபுரத்தில் மோட்டர்சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதையடுத்து அங்கிருந்து லொறியை சாரதி நிறுத்தாமல் தப்பியோடியுள்ளார்.

இவ்விபத்தில் சம்பவததில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் சம்பவ இடத்தில் உயிரிழந்த நிலையில், மீட்கப்பட்டு திருக்கோவில் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 15-20 ஓட்டங்களை அதிகமாக விட்டுக்கொடுத்துவிட்டோம்

## தோல்வியின் பின்னர் பாக். அணித்தலைவர்



"ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை அணியிடம் தோல்வியடைந்து சம்பியனாகும் வாய்ப்பை பாகிஸ்தான் அணி இழந்தது". - தோல்வியின் பின்னர் பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை அணிக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதல் 8 ஓவர்களின்போது நாங்கள் இலங்கை அணிக்கு எதிராக ஆதிக்கம் செலுத்தினோம். அடுத்து ராஜபக்ஷ, ஹசரங்க ஆகியோரின் இணைப்பாட்டம் சிறப்பாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தது.

15-20 ஓட்டங்களை அதிகமாக விட்டுக்கொடுத்து விட்டோம். அதேபோன்று களத்தடுப்பும் திருப்திகரமாக இல்லை. வெற்றி, தோல்வி இரண்டும் விளையாட்டில் சகஜம். ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடருக்கு தயாராவதற்கு இந்த தொடர் நல்ல பயிற்சியாக அமைந்துள்ளது - எனக் கூறினார்.

# சி.எஸ்.கே. அணியைப்போல் கிண்ணத்தை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது

## சம்பியனான பின்னர் சானக்க தெரிவிப்பு



ஆம் ஆண்டுக்கான ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி சம்பியன் பட்டம் வென்று அசத்தியது. இறுதிப்போட்டியின் ஆரம்பத்தில் தடுமாறிக்கொண்டிருந்த இலங்கை அணி பின்னர் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி இவ்வாறு சம்பியன் பட்டம் வென்றது.

தொடரின் முதல் போட்டியிலேயே ஆப்கானிஸ்தான் அணியிடம் படுதோல்வியடைந்த நிலையில், அணித்தலைவர் தசுன் சனக்க மனம் தளராது அடுத்த போட்டிகளில் அணியை சிறப்பாக வழிநடத்தி இறுதிப்போட்டிவரை கொண்டுவந்து இறுதியில் பாகிஸ்தான் அணியுடனான ஆட்டத்திலும் அணியை சம்பியன் பட்டம் வெல்லும் வரைக்கும் சிறப்பாக வழிநடத்தினார்.

இறுதியில் சம்பியன் பட்டம் வென்ற பின்னர் அணித்தலைவர் தசுன் சானக்க இவ்வாறு தெரிவித்தார். அமீரகத்தில் நாணய சுழற்சியை இழந்த உடனே போட்டியை இழந்த மாதிரியான மனநிலை முன்கூட்டியே வந்துவிடும். ஆனால், நாங்கள் அப்படியிருக்கவில்லை. பார்வையாளர்கள் எங்களுக்கு பெருமளவில் ஆதரவு தந்தார்கள். மேலும், 2021ஆம் ஆண்டு ஐ.பி.எல். பைனலில் சி.எஸ்.கே. முதலில் களமிறங்கித்தான் கிண்ணத்தை வென்றார்கள். இதுதான் எங்களுக்கு ஊக்கம் தந்தது. அவர்களைப்போல் கிண்ணத்தை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது. ஹசரங்க, ராஜபக்ஷ, கருணரத்ன ஆகியோர் சிறப்பாக பேட்டிங் செய்தார்கள் எனக் கூறினார்.

மேலும் பேசிய அவர், 160இற்கும் மேற்பட்ட ஓட்டங்களை இலக்காக வைத்திருந்தால் அது சேஸ் செய்யக்கூடியதாகத்தான் இருந்திருக்கும். கடைசி பந்தில் சிக்ஸர் அடித்ததால் 170 ஓட்டங்களை எட்டினோம். மனரீதியில் 170 என்பது பெரிய ஸ்கோராகத்தான் தெரியும். இன்று 100 சதவீத உழைப்பை கொடுத்து வென்றுள்ளோம் எனத் தெரிவித்தார்.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

# ஆறு வருடங்களின் பின்னர் ஜனாதிபதி கிண்ணம் இஸிப்பத்தன வசம்




டயலொக் பாடசாலை ரக்பி லீக் தொடரின் ஜனாதிபதி கிண்ணத்தை இஸிப்பத்தன கல்லூரி அணி ஆறு வருடங்களின் பின்னர் சுவீகரித்தது. குறித்த தொடரில் வீழ்த்தப்படாத ஒரே அணியாகவும் இஸிப்பத்தன கல்லூரி சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு ரோயல் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சென். ஜோசப் கல்லூரியை எதிர்த்து ஆடிய இஸிப்பத்தன கல்லூரி முதல் பாதி தொடக்கம் ஆதிக்கம் செலுத்தியது. முதல் பாதியில் ஜோசப் கல்லூரியால் ஒரு புள்ளியையேனும் பெறமுடியவில்லை.

இரண்டாம் பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய இஸிப்பத்தன கல்லூரி இறுதியில் 49 – 22 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்று ஆறு வருடங்களின் பின்னர் டயலொக் ஜனாதிபதி கிண்ணத்தை சுவீகரித்தது.

Dialog SCHOOLS RUGBY KNOCKOUTS

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# 19 வயதில் கிராண்ட்ஸ்லாம் வென்று சாதனை படைத்த அல்கார்ஸ்



ஆண்டின் இறுதி கிராண்ட்ஸ்லாம் தொடரான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்தது. மகளிர் ஒற்றையர் பிரிவில் போலந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக் சம்பியன் பட்டம் வென்று அசத்தினார்.

இந்த சீசனின் 2 கிராண்ட்ஸ்லாமை வென்றிருந்த நடாலும், அமெரிக்க ஓபன் தொடரின் நடப்பு சம்பியனான மெட்வெடேவும் இத்தொடரில் காலிறுதிக்கு முந்தைய சுற்றிலேயே தோல்வியடைந்து வெளியேறியிருந்தனர். ஜாம்பவான் ஜோகோவிச் கொரோனா தடுப்பூசி காரணமாக பங்கேற்கவும் இல்லை.

ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கார்ஸ் மற்றும் நோர்வே நாட்டு வீரர் காஸ்பர் ரூட் ஆகியோர் இறுதிப்போட்டிக்குள் நுழைந்தனர். இருவருக்கும் இதுவே முதல் கிராண்ட்ஸ்லாம் இறுதிப்போட்டி என்பதால் டென்னிஸ் உலகிற்கு இம்முறை ஒரு புதிய சம்பியன் கிடைக்கப்போகிறார் என்ற எதிர்பார்ப்பு எழுந்தது.

முதல் செட்டை 6-4 என கார்லோஸ் வென்ற நிலையில், 2ஆவது செட்டை காஸ்பர் ரூட் 6-2 என கணக்கில் வென்றார். இதன்பின் கார்லோஸ் மூன்றாவது செட்டை 7-6 (7-1) என்ற கணக்கில் வென்று முன்னிலை பெற்றார். தொடர்ந்து அடுத்த செட்டையும் 6-3 என்ற கணக்கில் வெற்றிபெற்று தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார்.

2005ஆம் ஆண்டு நடால், தனது 19ஆவது வயதில்தான் ஃபெடரரை வீழ்த்தி முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை பெற்றிருந்தார். அதன்பின் தற்போது அதே ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 19 வயதான கார்லோஸ் தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ளார். இதன் மூலம் நடாலுக்குப் பிறகு இளம் வயதில் முதல் கிராண்ட்ஸ்லாமை பெறும் வீரர் என்ற சாதனையை கார்லோஸ் பதிவுசெய்தார்.

அமெரிக்க ஓபனை வென்றதன் மூலம் டென்னிஸ் தரவரிசையில் நம்பர் 1 இடத்திற்கு கார்லோஸ் முன்னேறியுள்ளார். இதன்மூலம் ஆடவர் டென்னிஸ் வரலாற்றில் மிக இளம் வயதில் நம்பர் 1 இடத்திற்கு வந்தவர் என்ற சாதனையையும் கார்லோஸ் படைத்துள்ளார்.

# ஈச்ச நகர் பகுதியில் காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

(கிண்ணியா நிருபர்)

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்ச நகர் பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். மூன்று பிள்ளைகளின் தந்தையான கல்மெடியாவ தெற்கைச் சேர்ந்த பியதிஸ்ஸ பண்டார (வயது 39) என்பவரே யானை தாக்கி மரணமடைந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை விறகு எடுக்கச் சென்றவரே மூன்று நாட்களாகியும் வீடு திரும்பாததனால் அவரை தேடிச் சென்ற வேலையிலேயே ஈச்சக்குளத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள காட்டுப் பகுதியில் இருந்து சடலமாக நேற்று முன்தினம் (11) மீட்கப்பட்டுள்ளார்.

மூன்று நாட்கள் கடந்த நிலையில், உயிரிழந்தவரின் உடல் உறுப்புகள் சிதைந்து காணப்படுகின்றன. சில பகுதிகள் காட்டு மிருகங்களால் வேட்டையாடப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக தம்பலகாமம் பொலிஸார், கந்தளாய் திடீர் மரண விசாரணை அதிகாரி உட்பட சடலம் காணப்படும் இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனையில் தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்த நடவடிக்கை; கட்டணம், நேர காலம், சுற்றுச்சூழல் தொடர்பிலும் கட்டுப்பாடுகள் விதிப்பு

(சாய்ந்தமருது நிருபர்)



கல்முனை மாநகர சபை ஆட்புல எல்லையினுள் இயங்கி வருகின்ற தனியார் கல்வி நிலையங்களில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாக கிடைக்கப்பெற்று வருகின்ற முறைப்பாடுகளை கவனத்திற்கொண்டு, அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்துள்ளார்.

இதன்படி இப்பிரதேசங்களில் தனியார் கல்வி நிலையம் ஒன்றினை நடத்துவதாயின் பூர்த்திசெய்யப்பட வேண்டிய விதிமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை மாநகர சபை வெளியிட்டிருப்பதுடன், இவ்விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு வியாபார உத்தரவுப்பத்திர அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் கடல் அனர்த்த பாதுகாப்பு எல்லையிலிருந்து 100 மீற்றருக்கு அப்பால் அமைக்கப்பட்டிருப்பதோடு அனர்த்தங்கள் ஏற்படும்போது மாணவர்கள் இலகுவாக வெளியேறக்கூடிய நுழைவாயில்களும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இங்கு பிரத்தியேக வகுப்புகள் காலை 8.00 மணி தொடக்கம் பி.ப. 1.00 மணிவரையும் பிற்பகல் 3.15 மணிமுதல் பிற்பகல் 6.15 மணிவரையுமே நடத்தப்பட வேண்டும்.

வகுப்புகள் நடத்தப்படுகின்ற கட்டடத்தின் கூரையானது ஓடு வேயப்பட்டுள்ளது. வெப்பமேற்றலை தவிர்க்கக்கூடிய அமைப்பில் குறித்த கட்டடம் சுகாதார விதிமுறைகளுக்கமைவாக திறந்த காற்றோட்டம் உள்ளதாக அமைந்திருத்தல் வேண்டும்.

கதிரை, மேசைகள் வயது வித்தியாசத்திற்கேற்ப சொகுசானதாகவும் பாதுகாப்பானதாகவும் இருத்தல் வேண்டும். ஆண், பெண் இருபாலாருக்குமுரிய மலசலகூட வசதிகள் வெவ்வேறாக அமையப் பெற்றிருத்தல் வேண்டும். மலசலகூட வசதியானது 25 மாணவர்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தேவையேற்படின் கொவிட்-19 மற்றும் தொற்றுநோய் பரவலை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக உட்புறமாக தனிமைப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளையும், அதன் கீழான வர்த்தமானி அறிவித்தல்களையும், சுகாதார விதிகளையும் அதனோடு தொடர்புபட்ட உப விதிகளையும் பின்பற்றல் வேண்டும்.

மாணவர்களின் வாகனங்கள், சைக்கிள்களை பாதையோரங்களில் நிறுத்திவைத்து பொதுப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தக் கூடாது. தேவையேற்படின் தங்களுடைய வளாகத்தினுள்ளேயே வாகனத் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்தியிருத்தல் வேண்டும். அத்துடன், அயலவர்களுக்கு இடையூறாக அமையக்கூடாது.

பாடசாலையில் பரீட்சை மற்றும் தவணை விடுமுறை வழங்கப்பட்டு, கட்டாயம் ஆகக்குறைந்தது ஒரு வாரகாலத்திற்குப் பின்னரே தனியார் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். மாதத்தில் வரும் எந்தவொரு பொது விடுமுறை தினத்திலும் வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளைகளிலும் வகுப்புகளை நடத்துவது கூடாது.

ஒரு பாடம் ஆகக்குறைந்தது 50 நிமிடங்களுக்கு குறையாதவாறு நடத்தப்பட வேண்டும். 50 நிமிடங்களுக்கு குறையாதவாறு நடத்தப்படும் ஒரு பாடவேளைக்காக கட்டணம் தரம் 01 முதல் தரம் 05 வரையான வகுப்புகளுக்கு ஆகக்கூடியது 40 ரூபாவும் தரம் 06 முதல் க.பொ.த. சாதாரண தரம் வரையான வகுப்புகளுக்கு 50 ரூபாவும் க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்கு 80 ரூபாவுமே அறவிடப்பட வேண்டும்.

அத்துடன், மாணவர்களிடம் சேர்வுக் கட்டணம் அறவிடப்படக் கூடாது. கற்பிக்கின்ற பாடங்களின் நேர அட்டவணைகள், ஆசிரியர்களின் விபரங்கள் என்பன உறுதிப்படுத்தப்பட்டு கல்முனை மாநகர சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் போன்ற நிபந்தனைகள் கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என முதல்வர் ஏ.எம்.றகீப் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ‘பன்னாட்டுக் குற்றங்கள்’ நூல் வெளியீடு

(கிண்ணியா நிருபர்)



கலாநிதி ஸ்ரீ ஞானேஸ்வரன் எழுதிய ‘பன்னாட்டுக் குற்றங்கள்’ எனும் நூலானது நேற்று முன்தினம் (11) ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையிலுள்ள ஜூபிலி மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

காலை 10 மணியளவில் சுடரேற்றல் மற்றும் அகவணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வுக்கு திருகோணமலை மாவட்ட ஆயர் வண.கலாநிதி நோயல் இம்மானுவேல் தலைமை தாங்கினார். அவரது தலைமை உரையைத் தொடர்ந்து வருகையாளர்களுக்கு நூல்கள் கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசியற்துறைத் தலைவர் பேராசிரியர் நூலை மதிப்பாய்வு செய்து உரையாற்றியதுடன், இந்நூலின் முக்கியத்துவம் பற்றியும் தன் உரையில் குறிப்பிட்டுப் பேசியிருந்தார்.

அதைத் தொடர்ந்து நூலாசிரியரின் ஏற்புரையும் நன்றியுரையும் இடம்பெற்றது. இந்நூலானது ஆங்கிலம், ஜேர்மன், டொச் மற்றும் சிங்களம் முதலான மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளமை பற்றியும் நூலாசிரியர் தன் உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிகழ்வை ஊடகவியலாளர் ச.திருச்செந்தூரன் தொகுத்து வழங்கியதுடன், வரவேற்புரையை நிகழ்த்தியிருந்தமையும், முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி முதலான அரசியல் பிரமுகர்கள், திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறீதரன், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கோரளைப்பற்று விவசாய கிராமங்களுக்கு பெயர்ப்பலகை இடும் வேலைத்திட்டம்



(மட்டக்களப்பு நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்களான வை.யோகேஸ்வரன், எம்.கிருபநாதன், ரீ.கிருபைராசா ஆகியோரது வேண்டுகோளுக்கிணங்க கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட வாகனேரி, மயிலந்தனை, பொத்தானை, சாலம்பன்சேனை, முள்ளிவட்டவான், வடமுனை, ஊத்துச்சேனை, கள்ளிச்சை போன்ற விவசாய கிராமங்களுக்கு பெயர்ப்பலகையிடும் வேலைத்திட்டம் தவிசாளர் ஏ.எம்.நௌபரால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச சபையின் உப தவிசாளர் ஏ.ஜி.அமீர் ஆசிரியர் மற்றும் உறுப்பினர்களான எம்.பி.ஜௌபர், வை.யோகேஸ்வரன், எம்.கிருபநாதன், ரீ.கிருபைராசா மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# மட்டு. மாநகர சபையின் 64ஆவது சபை அமர்வில் இரண்டாம் எலிசபெத் மகாராணிக்கு அஞ்சலி





(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபையின் 64ஆவது சபை அமர்வு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இவ்வமர்வில் மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர பிரதி ஆணையாளர் உ.சிவராசா, மாநகர சபையின் பொறியியலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

வழமையான சபை சம்பிரதாயங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வமர்வில் நிலையியற் குழுக்களின் சிபாரிசுகள், முதல்வரின் முன்மொழிவுகள், உறுப்பினர்களின் முன்மொழிவுகள் போன்றன இடம்பெற்றன.

நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினை மற்றும் காகிதாதிப் பிரச்சினை உள்ளிட்ட காரணங்களினால் சபை கூட்டறிக்கை அறிக்கையாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படாமல் மின்னிதழ் ஊடாக வழங்கும் சுற்றுநிருபம் தொடர்பில் மாநகர சபை உறுப்பினர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பில் கருத்துகள் பரிமாறப்பட்டன.

இதில் விசேடமாக பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளுக்கான பாதீட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன், மரணமடைந்துள்ள இரண்டாம் எலிசபெத் மகாராணிக்கு இதன்போது மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு மாநகர சபை அமர்வு நிறைவிற்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!




**தமிழரசுக் கட்சிய கட்டுக்கோப்பாக வைக்கும்படி அதன் தலைவர் மாவையருக்கு ரெலோ கட்சி செயலாளர் ஜனா ஒரு கடிதம் எழுதி இருக்கிறார் எலுவா?**

**யாருக்கு யார் புத்திமதி கூறுவதெண்டே வெவஸ்தையில்லாம போச்சு**

**சரி மாவைக்கு எழுதிற கடிதமும் எருமை மாட்டில ஊத்துன தண்ணியும் ஒண்டுதான் எண்டது ரெலோக்காரர்களுக்கு புரியாமல் இருப்பதுதான் ஆச்சரியம்!**

# வாழைச்சேனை ஆயிஷா வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர் பரீட் கௌரவிப்பு



(மீராவோடை நிருபர்)

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்திலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற எம்.ரீ.எம்.பரீட் அதிபரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (11) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்ட அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு அதன் தலைவர் எம்.ஐ.செயினுலாப்தீன் தலைமையில் சந்தியாற்று வெளியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பரீட் அதிபர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வின்போது மரணமடைந்த அதிபர்களான என்.எம்.ஹஸ்ஸாலி, யூ.எல்.எம்.புஹாரி ஆகியோர் நினைவுகூரப்பட்டு, அவர்களுக்காக விசேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

அத்துடன், ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தால் வெளியிடப்பட்ட ‘எம்.ரீ.எம்.பரீட் எனும் ஆளுமை’ எனும் நூலும் அதிபர்களுக்கு வழங்கப்பட்டன.



இந்நிகழ்வில், அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர், மட்டக்களப்பு மத்தி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.யூ.எம்.இஸ்மாயில், ஆசிரிய ஆலோசகர் எம்.பீ.எம்.நபீர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா

(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கில் தேரோடும் கோயில் எனப் புகழ்பெற்ற மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் தேரோட்டம் நேற்று முன்தினம் (11) மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

ஆலய பிரதம குரு மு.கு.சச்சிதானந்தக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெற்ற இத்தேரோட்டத் திருவிழாவில் வசந்த மண்டப பூஜைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து சுவாமி தேரேறி வெளிவீதியில் வலம் வந்தார்.

தான்தோன்றீஸ்வரர் உமாதேவியார் சமேதராய் சித்திரத் தேரும், பிள்ளையார் தேரும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வடம்பிடித்து இழுக்க மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றது.

ஆலயத்தின் கொடியேற்றம் கடந்த 29.08.2044 அன்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெறிருந்தது. நேற்று முன்தினம் (11) இரவு 7 மணியளவில் திருவேட்டை இடம்பெற்று, நேற்று (12) காலை 6 மணியளவில் தீர்த்தோற்சவமும் இடம்பெற்றது.

# சாய்ந்தமருதில் ஹெரோயினுடன் இருவர் கைது

(பாறுக் ஷிஹான்)



ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த 2 சந்தேக நபர்களை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடி வீதியில் சந்தேகநபர்கள் இருவரும் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் நேற்று முன்தினம் கைதாகினர்.

இவ்வாறு கைதான நபர்கள் சாய்ந்தமருது கல்முனை பகுதியைச் சேர்ந்த 19 மற்றும் 56 வயது மதிக்கத்தக்கவர்கள் என்பதுடன், சந்தேக நபர்கள் வசமிருந்து ஹெரோயின் போதைப்பொருள் 9 கிராம் 580 மில்லிகிராம் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சோதனை நடவடிக்கையின்போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட பதில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நளீன் பெரேரா ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.பி.பி.எம்.டயஸ் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் சார்ஜன்ட்களான பண்டார (13443) அபேரட்ன (75812) பொலிஸ் கான்ஸ்டபிள்களான நிமேஸ் (90699), திலகரட்ண (90740), சாரதி குணபால (19401) ஆகியோர் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபர்களை கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்கள் சான்றுப் பொருட்களுடன் சாய்ந்தமருது பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# விடைகொடுத்த பல்மோரல்; விடைபெற்றார் மகாராணி

## பிரிட்டன் நாடாளுமன்றத்தில் இரங்கல் புதிய மன்னர் 3ஆம் சார்ள்ஸ் பங்கேற்பு

## 19இல் இறுதிச்சடங்கு; பாரம்பரிய சடங்குகள் தொடங்கின

மறைந்த ராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச்சடங்குகள் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், நேற்று பிரித்தானிய நாடாளுமன்றத்தில் எலிசபெத்துக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் புதிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் பங்கேற்றதுடன், பாரம்பரிய சடங்கு நிகழ்ச்சிகளிலும் அவர் கலந்துகொண்டார்.

### 'ஒபரேஷன் லண்டன் பிரிட்ஜ்'

ராணி எலிசபெத்தின் இறுதிச்சடங்கு, எதிர்வரும் 19ஆம் திகதி இடம்பெறுமென பெக்கிங்ஹாம் அரண்மனை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. 19ஆம் திகதிவரை நடைபெறவுள்ள இறுதிச்சடங்கு விவரங்களையும் அது வெளியிட்டுள்ளது.

இதற்கு, 'ஒபரேஷன் லண்டன் பிரிட்ஜ்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இதன்படி நாளை 13ஆம் திகதி - ஸ்கொட்லாந்திலிருந்து ராணியின் உடல் பெக்கிங்ஹாம் அரண்மனைக்கு கொண்டுவரப்படுகிறது.

14ஆம் திகதி - பெக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து நாடாளுமன்றத்தின் வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்துக்கு எலிசபெத்தின் உடல் கொண்டுசெல்லப்பட்டு, பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

16ஆம் திகதி - மன்னர் சார்ள்ஸும், அவருடைய மனைவியும் வேல்ஸ் நகருக்குச் சென்று, ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய நான்கு நாடுகளுக்கும் சென்றுவிட்டு திரும்புவர்.

19ஆம் திகதி - எலிசபெத்தின் இறுதி ஊர்வலம் நடக்கும். அவருடைய உடல் ஊர்வலமாக வெஸ்ட்மின்ஸ்டர் அபேக்கு எடுத்துச்செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படும். அப்போது, அவருடைய கணவர் பிலிப்பின் உடலும் எடுத்துவரப்பட்டு அருகருகே அடக்கம் செய்யப்படவுள்ளது. இந்த நிகழ்ச்சியில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்ளிட்ட உலகத் தலைவர்கள் கலந்துகொள்வர்.

### விடைகொடுத்த பல்மோரல்

பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத், உடல்நலக்குறைவால் தனது 96ஆவது வயதில் கடந்த 8ஆம் திகதி அவர் வசித்துவந்த பல்மோரல் அரண்மனையில் உயிரிழந்தார்.

ராணி எலிசபெத்திற்கு மிகவும் பிடித்த வீடு என்றால் அது ஸ்கொட்லாந்திலுள்ள பல்மோரல் இல்லம்தானாம் (Balmoral Castle).

இந்த பல்மோரல் இல்லம் ஸ்கொட்லாந்திலுள்ள Aberdeenshire என்னும் இடத்தில் 50,000 ஏக்கர்கள்கொண்ட எஸ்டேட்டாக இருக்கிறது. ராணி எலிசபெத், தன்னுடைய சிறுவயதில் தாத்தா கிங் ஜோர்ஜ், பாட்டி ராணி மேரியுடன் கிராமப்புறங்களால் சூழப்பட்ட இந்த பல்மோரல் இல்லத்தில்தான் தன் மகிழ்ச்சியான விடுமுறை நாட்களைப் பெரும்பாலும் கழித்திருக்கிறார். அரச சார்பில் இங்கு ஏராளமான விருந்து விழாக்களையும் நடத்தியுள்ளார். இதுமட்டுமன்றி அங்கு நடைபெறும் பல விளையாட்டு நிகழ்வுகளையும் மற்ற அரச குடும்ப உறுப்பினர்களுடன் பார்த்து மகிழ்ந்திருக்கிறார்.

இளவரசர் பிலிப்பின் கடைசி நாட்களின் பெரும்பகுதியை ராணி எலிசபெத், அவருடன் பல்மோரல் இல்லத்தில்தான் கழித்திருக்கிறார். நவம்பர் 2020இல் தங்கள் 73ஆவது திருமண ஆண்டு விழாவை பல்மோரல் இல்லத்தில்தான் கொண்டாடியிருக்கின்றனர். இங்குதான் ராணியின் உயிரும் பிரிந்திருக்கிறது.

ராணியின் மறைவைத் தொடர்ந்து, இளவரசராக இருந்த மூன்றாம் சார்ள்ஸ் மன்னரானார். மறைந்த ராணி எலிசபெத்தின் இறுதிச்சடங்கு எதிர்வரும் 19ஆம் திகதி லண்டனிலுள்ள வெஸ்ட்மினிஸ்டர் வளாகத்தில் நடைபெறுகிறது. அதற்கு முன்னதாக அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ராணிக்கு இறுதி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியுள்ளன. இதற்காக ராணியின் அதிகாரப்பூர்வ இருப்பிடமான ஸ்கொட்லாந்தின் தலைநகர் எடின்பர்க்கிலுள்ள



'ஹோலிரூட்ஹவுஸ்' மாளிகையில் வைக்கப்பட்டது.

முன்னதாக நேற்றுமுன்தினம் ராணியின் உடல் ஸ்கொட்லாந்தின் பல்மோரல் மாளிகையிலிருந்து எடின்பர்க் பகுதிக்கு கொண்டுசெல்லப்பட்டது.

வேல்ஸ் இளவரசரும், இளவரசியுமான வில்லியம் - கேத் மிடில்டன் தம்பதி, இளவரசர் ஹரி - மேகன் மார்கெல் ஆகியோரும் விண்ட்சர் அரண்மனைக்கு வருகை தந்து மரியாதை செய்தனர். அரச குடும்பத்தினர் மரியாதை செலுத்திய பின்னர், பிரித்தானிய மக்கள் ராணிக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்காக எலிசபெத்தின் உடல் லண்டனிலுள்ள வெஸ்ட்மினிஸ்டர் மண்டபத்தில் 4 நாட்கள் வைக்கப்படவுள்ளது. ராணிக்கு அஞ்சலி செலுத்த ஏராளமான மக்கள் பெக்கிங்ஹாம் அரண்மனை வாசலில் குவிந்துள்ளனர்.

தொடர்ந்து எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறும் இறுதி ஊர்வலத்தில் பிரித்தானியாவின் முக்கிய பிரமுகர்களும், பல்வேறு உலக நாடுகளின் தலைவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நேற்று முதன்முறையாக மன்னர் சார்ள்ஸ் (3) மற்றும் ராணி கமீலா ஆகியோர் லண்டனிலுள்ள வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்திற்கு வருகைதந்தனர். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் புதியதாக பதவியேற்ற மன்னர் சார்ள்ஸுக்கு வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டதுடன், ராணி எலிசபெத்துக்கு இரங்கலும் தெரிவிக்கப்பட்டது. அதன்பின் சார்ள்ஸும், கமீலாவும் எடின்பர்க்கிற்கு சென்று அங்கு நடக்கும் பாரம்பரிய சடங்குகளில் கலந்து கொண்டனர்.

ராணியின் உடல் ஹோலிரூட்ஹவுஸ் அரண்மனையிலிருந்து அருகிலுள்ள செயின்ட் கில்ஸ் கதீட்ரலுக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. மாலையில் மன்னர் மற்றும் மன்னர் குடும்ப உறுப்பினர்கள் தங்கள் ராணியின் நினைவாக கதீட்ரலில் இடம்பெற்ற பாரம்பரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். பின்னர் அங்கு பொதுமக்கள் அஞ்சலிக்கு அனுமதிக்கப்பட்டனர்.

### கொமன்வெல்த்தை கட்டிக்காப்பது எப்படி?

மறைந்த இரண்டாம் எலிசபெத், அவுஸ்திரேலியாவிலிருந்து ஆன்டிகுவா நாடு வரையிலான 56 நாடுகளைக்கொண்ட பொதுநலவாய நாடுகளை நேசிப்புடன் ஒன்றாக வைத்திருந்தார். ஆனால், தனது தாய் இரண்டாம் எலிசபெத் மறைந்தவுடன், சுதந்திர நாடுகளாக வலுப்பெற்றிருக்கும் பொதுநலவாய நாடுகளை எவ்வாறு கட்டிக் காப்பது என்ற கவலை புதிய மன்னரான மூன்றாம் சார்ள்ஸுக்கு வந்துள்ளது.

அவருக்கு இது மிகப்பெரிய சவால்களில் ஒன்றாக பார்க்கப்படுவதால், பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளரான பாட்ரிசியா, பெக்கிங்ஹாம் அரண்மனையிலுள்ள பொதுநலவாய நாடுகளின் அதிகாரிகளை சந்தித்து ஆலோசனை நடத்தினார். புதிய மன்னரின் பதவியேற்பு குறித்தும் விளக்கினார்.

அதன் தொடர்ச்சியாகவே அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் 'சார்ள்ஸ்கிங்' என்று அதிகாரப்பூர்வமாக பிரகடனத்தை வெளியிட்டன. ஆனால், கரீபியன் தீவு நாடான பார்படோஸ் போன்ற நாடுகள் தங்களை குடியரசு நாடுகளாக சமீபத்தில் அறிவித்துக்கொண்டதால், அவை அரச குடும்பத்துடன் ஒத்துபோகுமா என்பதும் கேள்வியாகவுள்ளது.



மேலும் கனடாவின் பிராந்தியமொன்றும், ஜமேக்கா போன்ற நாடுகள் தங்களை காலனி ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கவேண்டும் என்று கூறிவருகின்றன. ராணி எலிசபெத்தின் மறைவுக்குப் பின்னர் சார்ள்ஸ் மன்னராகக் கூடாது என்றும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. அதனால், புதிய மன்னர் சார்ள்ஸ், பொதுநலவாய நாடுகளை எப்படி ஒருங்கிணைத்துக்கொண்டு செல்வார் என்பது புதிய தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

### 11 மணிநேர சமரசப் பேச்சு; இணைந்த சகோதரர்கள்

மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவைத் தொடர்ந்து, அவருடைய குடும்பத்தில் நிலவிவந்த மோதல்களும் முடிவுக்கு வந்துள்ளன. அரண்மனையை விட்டு வெளியேறிய இளவரசர் ஹரியும், அவருடைய சகோதரரான இளவரசர் வில்லியம்ஸும் சமரசமாகி கைகோர்த்துள்ளனர். அவர்கள் தங்கள் மனைவிகளுடன் பொதுவெளியில் வருவதைப் பார்த்து மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

ராணியின் செல்ல பேரப்பிள்ளைகளாக அப்போதைய இளவரசரும், தற்போதைய மன்னருமான சார்ள்ஸ் - மறைந்த டயானா தம்பதியின் மகன்களான இளவரசர்கள் ஹரி, வில்லியம்ஸ் இருந்தனர். இவர்களில் சார்ள்ஸின் 2ஆவது மகனான ஹரி, அமெரிக்காவைச் சேர்ந்த நடிகை மேகனை திருமணம் செய்தது ராணிக்கு பிடிக்கவில்லை. இதனால், குடும்பத்தில் மோதல் ஏற்பட்டு பிரிந்த ஹரி - மேகன் தம்பதியர் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தனர்.

மகாராணியின் மறைவையடுத்து மகன்களிடம் மன்னர் சார்ள்ஸ் தொலைபேசியில் தொடர்புகொண்டு சமரசம் செய்துள்ளார்.

அவர்களிடம் மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் 11 மணிநேரத்துக்கு மேல் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின்னர், வில்லியம்ஸும், ஹரியும் தங்கள் மனைவியருடன் ராணியின் இறுதிச்சடங்கு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வந்தனர்.

கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக பொதுவெளியில் தம்பதிகளை பார்க்காத பிரித்தானிய மக்கள், முதன்முறையாக இவர்களை பார்த்ததும் ஆரவாரம் செய்தனர். துக்கத்திலும் ஒரு நன்மை நடந்துள்ளதாக அவர்கள் மகிழ்ந்தனர். ராணியின் மரணத்திற்கு இரங்கல் தெரிவிக்க விண்ட்சர் தோட்டத்தின் வாசலில் நின்றிருந்த ஆயிரக்கணக்கான மக்கள், வில்லியம்ஸ் - கேத், ஹரி - மேகன் தம்பதிகளுடன் கைகுலுக்கி அன்பைப் பகிர்ந்துகொண்டனர்.

### ராணி எழுதிய இரகசியக் கடிதம்: 2085 வரை பிரிக்க முடியாது

ராணி எலிசபெத் கைப்பட எழுதிய இரகசியக் கடிதம் சிட்னியில் மிகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. அதனை இன்னும் 63 ஆண்டுகளுக்குப் பிரித்து படிக்க முடியாது என தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடிதம் குறித்து அவுஸ்திரேலிய ஊடகங்கள் வெளியிட்டிருக்கும் செய்தியில்,

கடந்த 1986ஆம் ஆண்டு சிட்னி மக்களிடையே உரையாற்றும் வகையில் பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத் கைப்பட எழுதிய கடிதம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் ஒரு பெட்டகத்தில் வைத்துப் பூட்டப்பட்டு, சிட்னியிலுள்ள வரலாற்றுப் பெருமைவாய்ந்த கட்டடத்துக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. இதனை 2085ஆம் ஆண்டுதான் பிரித்துப் படித்து, அதிலிருக்கும் ராணியின் தகவல் சிட்னி மக்களுக்குத் தெரிவிக்கப்படும்.

இந்தக் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை ராணியின் மிக நெருங்கிய உதவியாளர்கள் கூட அறிந்திருக்க முடியாது. காரணம், மிகவும் இரகசியமான இடத்தில் அமர்ந்துதான் ராணி அந்தக் கடிதத்தை எழுதினாராம்.

சிட்னி மேயருக்கு எழுதப்பட்டிருக்கும் அந்தக் கடிதத்தில், முக்கிய குறிப்பொன்று உள்ளதாம். அதில், எதிர்வரும் 2085ஆம் ஆண்டு ஒரு நல்ல நாளை தெரிவுசெய்து இந்தக் கடிதத்தைப் பிரிக்கலாம். இதில் இருக்கும் செய்தியை அன்றைய நாளில் எனது செய்தியாக சிட்னி மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று ராணி எலிசபெத் குறிப்பிட்டிருக்கிறாராம்.

இவ்வாறு குறிப்பிட்டு, அழகாக எலிசபெத் ஆர் என்று அவர் கையெழுத்தும் இட்டிருக்கிறார் என்கின்றன தகவல்கள். ராணி இரண்டாம் எலிசபெத் இதுவரை அவுஸ்திரேலியாவுக்கு 16 முறை பயணம் மேற்கொண்டுள்ளார்.

திருமண தேடல் விளம்பரங்களை
இலவசமாக பிரசுரித்துக்கொள்ள
அரிய வாய்ப்பு!

உங்களுடைய அன்பான மகன் / மகளின் திருமணத்துக்கு பொருத்தமான துணையை தேடுகிறீர்களா? அவ்வாறாயின் அதற்கான வாய்ப்பை நாம் உங்களுக்குத் தருகிறோம்.



தமிழன் ஞாயிறு வார இதழில் வெளியாகும் விளம்பர பக்கத்தில் உங்களுடைய மகன் / மகளுடைய விபரங்களையும் எப்படியான துணையை தேடுகிறீர்கள் என்ற விடயத்தையும் தெளிவாக குறிப்பிட்டு (30 சொற்களுக்குக் குறைவாக) 23CM X 10CM அளவுள்ள கடித உறையில் உங்களுடைய விலாசத்தை குறிப்பிட்டு கீழே உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள். இவற்றுக்கு எதுவித கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது.

**உங்களுக்கு கிடைக்கும் சகல கடிதங்களையும் மூன்று வாரங்களுக்கு ஒருமுறை உங்களுடைய முகவரிக்கு நாம் அனுப்பி வைப்போம்.**

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்க : சுசி - 0115 886187

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி இல : 0115 200 900, தொலைநகல் : 0112 673 442
வட்ஸ்அப் : 076 139 3805

விவாஹா திருமண சேவை
தபால் பெட்டி இலக்கம் 2310,
கொழும்பு.

thamilaneditor@gmail.com

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7